DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
PROPERTY MAX
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
UTHAYAN
# உதயன்
திதிக்கும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வேகம் வாரம் செய்தி இதழ்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1503 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 24, 2025

# மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி ஏற்பாடு செய்த வரவேற்பு உபசாரத்தில் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட்

கடந்த 21-01-2025 அன்று செவ்வாய்க்கிழமை ஒன்றாரியோ மாகாண அரசின் அங்கத்தவரும் பல்கலாச்சார உறவுகள் மற்றும் சிறுவர் நலன் பேணல் ஆகிய அமைச்சுக்களின் பாராளுமன்றச் செயலாளருமான லோகன் கணபதி அவர்கள் ஏற்பாடு செய்த வரவேற்பு உபசாரத்தில் கலந்து கொண்ட மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் அங்கு கலந்து கொண்ட தமிழ் பேசும் ஆதரவாளர்களோடு நெருக்கமாக உரையாடி மகிழ்ந்தார். இங்கு காணப்படும் படத்தில்வர்த்தகப் பிரமுகர் **BEHIND ME MEDIA** ஊடக நிறுவன அதிபர் கனா செல்வராஜா மற்றும் அவரது துணைவியார் திபி மற்றும் வீடு விற்பனை முகவர் அமலன் அவர்கள் அவர்களோடு "உதயன் பிரதம ஆசிரியர் ஆகியோர் முதல்வர் டக்போர்ட் அவர்களோ உரையாடுவதைக் காணலாம். (தொடர்ச்சி 10ம் பக்கம்)




## இன்று 24ம் திகதி வெள்ளிக்கிழமை மார்க்கம் நகரில்




## எதிர்வரும் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோ நகரில்




(மேலதிக விபரங்களுக்கு 21ம் பக்கத்தில் உள்ள விளம்பரத்தைப் பார்க்கவும்)

## கனடாவிலிருந்து கியூபா சுற்றுலா!

இலங்கையை ஒத்த கால நிலையுள்ள கியுபா தேசத்திற்கு சென்று எமது தாயகச் சூழலை அனுபவியுங்கள். டிசம்பர் மாதம் முதல்வாரத்தில் இங்கிருந்து பயணம்.
**January 21** தொடக்கம் ஒரு வார காலம் நீங்கள் கியுபாவில் தங்கியிருக்கலாம். கட்டணம் **$1,300** மட்டுமே!
எம்மால் வழங்கப்படும் உணவோடு உடன் ஊராடு மற்றும் உடன் மீன் மற்றும் மரக்கறி வகைகள் பழங்கள் என அனைத்தையும் சுவையாகவும் சுத்தமாகவும் உண்டு மகிழலாம்.
தொடர்புகளுக்கு: Thava - 647-469-9839

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851



Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# கனடாவின் முக்கிய தேசியக் கட்சிகளில் ஒன்றான லிபரல் கட்சியின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு தமிழ் மக்களுக்கும் உண்டு!

கனடாவின் முக்கியமான தேசியக் கட்சிகளில் ஒன்றான லிபரல் கட்சியின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தெரிவுக் கூட்டம் இன்னும் சில வாரங்களில் நடைபெறவுள்ளது. மத்திய லிபரல் கட்சியின் தற்போதைய அரசாங்கத்தில் எமது தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினரான ஹரி ஆனந்தசங்கரிக்கு இரட்டை அமைச்சுக்களை அளித்து அழகு பார்த்தவர் எமது பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள். அதற்கு மேலாக இலங்கையில் கடந்த பல வருடங்களாக இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்கு இலங்கை அரசுகளே பொறுப்புக் கூற வேண்டும் என்று தொடர்ச்சியாக அதிகாரபூர்வமாக குரல் கொடுத்து வரும் ஆட்சியில் உள்ள லிபரல் கட்சியும் அதன் பிரதமரும் தமிழ் மக்களின் விருப்புக்களுக்கும் தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றார்கள்.

இவ்வாறான நிலையில், கனடாவின் முக்கியமான தேசியக் கட்சிகளில் ஒன்றான லிபரல் கட்சியின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தெரிவுக் கூட்டம் இன்னும் சில வாரங்களில் நடைபெறவுள்ளது. இந்த முக்கிய தெரிவுத் திட்டத்தில் தங்களையும் இணைத்துக் கொண்டு தகுதியான ஒரு புதிய தலைவரைத் தெரிவு செய்யும் பொறுப்பு தமிழ் மக்களுக்கும் உண்டு என்பதை எமது தமிழ் பேசும் உறவுகளுக்கு எடுத்துச் சொல்வது “உதயன்“ ஆசிரிய பீடத்தின் கடமைகளில் ஒன்று என்ற காரணத்தோடு இவ்வார கதிரோட்டத்தை எமது வாசகர்களுக்காக நாம் படைத்தளிக்கின்றோம்.

லிபரல் கட்சியான நீண்ட காலம் கனடிய மத்திய அரசை பொறுப்பேற்று நடத்தும் பணியில் இன்று நேற்றல்ல. பல ஆண்டுகளாக ஏற்று பல சவால்களுக்கு மத்தியில் கனடிய தேசத்தையும் அதன் மக்களையும் வழிநடத்திச் செல்கின்றது.. எனவே மேற்படி கட்சிக்கான புதிய தலைவரை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு அனைத்து மொழி பேசும் அல்ல பல்லின கலாச்சாரத்தைப் பேணி வரும் ஏனைய இனங்களுக்கு அல்லது அந்த இனங்கள் சார்ந்த மக்களுக்கு மட்டுமே உண்டு என்பது உண்மையல்ல. எமது தமிழ் மக்கள் லிபரல் கட்சியின் ஆட்சியில் பல பலன்களை அனுபவித்தவர்கள். உதாரணமாக. கோவிட் தொற்று நோய்க் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவித் திட்டங்களை அறிமுகம் செய்து அனைத்து இன மக்களும் தங்கள் நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்தது இந்த அரசுதான். எனவே கனடாவின் மத்திய லிபரல் கட்சிக்கான புதிய தலைவரை தகுதியறிந்து தேர்ந்தெடுக்கும் முக்கிய தேர்வு முறையில் நாமும் இணைந்து கொள்வது அவசியம் என்பதும் யார் புதிய தலைராக வரக்கூடியவர் என்பதையும் நாம் கலந்துரையாடல்களின் மூலம் தீர்மானித்துக் கொள்ளலாம்.

எமக்கு கிடைத்துள்ள தகவல்களின் லிபரல் கட்சியின் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் **Mark Carney** “(மார்க் கார்ணி) என்னும் வேட்பாளரையே ஆதரிக்கின்றார்கள் என்பது வெளிச்சமாகத் தெரிகின்றது. குறிப்பாக எமது பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் பகிரங்கமாக தனது அறிக்கையில் மார்க் கார்ணி என்னும் வேட்பாளரையே ஆதரிப்பதாக தெரிவித்துள்ளார். அத்துடன் ஈழத் தமிழ் மக்களோடு இணைந்து எப்போதும் பணியாற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அவர்களும் மார்க் கார்ணி அவர்களையே ஆதரிப்பதாக அறிவித்துள்ளார்கள்.
எனவே எமது தமிழ் மக்கள் மத்தியில் உள்ள லிபரல் கட்சி ஆதரவாளர்கள் தகுந்த ஒரு தலைவரை லிபரல் கட்சிக்கு அளிக்க அணி திரள்வார்கள் என்று நம்புகின்றோம்.!







**Basement for Rent**

Newly renovated basement apartment for rent. 2 bedroom, 1 bath, separate laundry room, full kitchen, separate entrance with parking spot.
14th Ave and 9th Line in Markham.

647-285-4856

**Basement for Rent**

Middlefield & Elson
Newly renovated basement.
2 bedrooms, separate entrance, 1 washroom, 2 parking spots, and separate laundry. Close to schools and all facilities. No pets.
Available immediately.

647-761-7568 416-371-4583

**வீடு விற்பனைக்கு**

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகர்மையில் கொழும்புத்துறை வீதி-பாண்டியன்தாழ்வில். 2 பரப்புக் காணயில் கடையுடன் சேர்த்து கட்டப்பெற்ற 3 அறைகள் கொண்ட அழகிய வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **437 441 5699**
அல்லது மின்னஞ்சல் saitheva09@gmail.com

# முன்னாள் நீதிபதி இளஞ்செழியனுக்கு அநீதி – அனுர அரசு திட்டமிட்டு புறக்கணிப்பு என சிவில் சமூகம் குற்றச்சாட்டு!




மேன்முறையீட்டு நீதிபதிக்கான தனது பதவி உயர்வு குறித்து அரசியலமைப்பு குழுவுக்கு விண்ணப்பித்தும் அது தொடர்பில் கண்டுகொள்ளாத அரசு முன்னாள் நீதிபதி இளஞ்செழியனுக்கு திட்டமிட்டு அநீதி இழைத்துள்ளதாக தீவக சிவில் சமூகம் குற்றம் சாட்டியுள்ளது.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் 22.01.2025 அன்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே குறித்த அமைப்பின் சார்பில் கலந்துகொண்ட கருணாகரன் நாவலன், முன்னாள் வடக்கு மாகண சபை உறுப்பினர் கனகரத்தினம் விந்தன் ஆகியோர் இவ்வாறு குற்றம் சாடியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில், இலங்கையின் சிறந்த நீதிபதிகளுள் ஒருவரும் தற்துணிவாக அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது தீர்ப்புக்களை வழங்கி நீதியை எதிர்பார்த்த மக்களை ஆற்றுப்படுத்திய நீதிபதி இளஞ்செழியனுக்கு பாரபட்சமான வகையில் இந்த அரசு பதவி உயர்வு வழங்காது பழிவாங்கியுள்ளது. இதை ஏற்க முடியாது.

நீதிபதி இளஞ்செழியன் தனது 27 ஆண்டுகால நீதித்துறையின் பதவிக் காலத்தில் பல்வேறு தீர்ப்புகளை அச்சமின்றியும் பாரபட்சமின்றியும் வழங்கியதால் இலங்கை மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றிருந்தார்.

ஆனால் அவருக்கான பதவிகள் அந்தந்தக் காலகட்டத்தில் வழங்கப்படாது அரசுகளால் திட்டமிட்ட வகையில் தட்டிக்களிக்கப்பட்டு வந்தது.

இதன் உச்சமாக தற்போது அனுர அரசும் தகுதிகள் அனைத்தும் இருந்து திட்டமிட்டு அவரது பதவி உயர்வை தடுத்து ஓய்வு நிலைக்கு தள்ள முயற்சித்துள்ளது. இதை எமது மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

அந்தவகையில் அரசு குறித்த பழிவாங்கலை கைவிட்டு அவரது பதவி உயர்வை வழங்க வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

இதேநேரம் அவ்வாறான சூழலை அரசு உருவாக்காது விட்டால் சிவில் சமூகங்கள் ஒன்றிணைந்து வீதிக்கு இறங்கி போராடும் நிலை வரும் எனவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த சந்திப்பில் கலந்துகொண்ட முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் கனகரத்தினம் விந்தன் கூறுகையில், கடந்த காலங்களில் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் JVP செய்த செயற்பாடுகள் அனைத்தையும் எமது மக்கள் நன்கு அறிவார்கள்.

அதே நேரம் அவர்கள் தமிழ் மக்களை ஒரு பொருட்டாக கண்டுகொள்ள விரும்புவதில்லை.

அவ்வாறான தரப்பினர் இன்று ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி கிளீன் சிறீலங்கா என்று கூறி தமிழ் மக்களை மட்டுமல்லாது ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் ஏமாற்றுகின்றது. மறைமுக பழிவாங்கல் போக்குடனும் செயற்படுவதாக மக்கள் கூறுவதை காண முடிகின்றது.

ஆனால் ஆட்சியை கைப்பற்ற அனுர தரப்பு மக்களுக்கு கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். இதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அத்துடன் தென்பகுதியைப் போன்று தமிழ் மக்களையும் உரிய தகுதிகளுக்கேற்ப நியமிக்க வேண்டும்.

இதேவேளை யாழ் கலாசார மத்திய நிலையத்தின் பெயர்மாற்றம் குறித்து கூறுகையில், யாழ் கலாசார மத்திய நிலையமானது ஈ.பி.டி.பி யாழ் மாநகரை ஆட்சி செய்த காலப்பகுதியில் தமிழ் மக்களின் கலாசாரத்தை பாதுகாக்கும் ஒரு குதியீடாக இந்திய அரசின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டது.

இது அன்று யாழ் மாநகரசபையை ஆட்சி செய்த ஈ.பி.டி.பியினர் பிரேரணையாக கொண்டுவந்தபோது தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் எதிர்க்கட்சியாக இருந்தும் கூட அந்த முயற்சி எமது மக்களின் கலாசாரத்தை கொண்டதாக இருந்தமையால் அதனை முழுமையாக ஆதரித்து வரவேற்றிருந்தோம்.

ஆனால் இன்று அதன் பெயர் மாற்றப்படுள்ளது வருத்தமளிக்கின்றது.

இதேவேளை இது தமிழ் மக்களின் கலாசாரத்தை சுமந்து நிற்கும் ஒரு வரலாற்றுக் கூடமாகும்.

இந்த பெயர் மாற்றம் இந்திய அரசின் செயற்பாடாகவோ அல்லது அரசின் செயற்பாடாகவோ இருந்தாலும் அதை மாற்றியமைக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

இதைவிட அந்த நிகழ்வில் தமிழுக்கு கடை நிலை வழங்கப்பட்டமை மற்றும் அந்த சம்பவம் திரை நீக்கம் செய்யும்போது தான் அவ்விடயம் தனக்கு தெரியும் என அமைச்சர் ஒருவர் தெரிவித்தமை வேதனையான விடையம் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த இலங்கைக்கான கனடாவின் தூதுவர்!



- கனடா உதயன் செய்தியாளர் யாழ்ப்பாணம்

இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் Eric Walsh அவர்களுக்கும் தமிழ் தேசியம் சார்ந்து பயணிக்கின்ற கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு 22-01-2025 அன்று புதன்கிழமை கொழும்பில் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் தமிழ் மக்களின் சமகால அரசியல் விவகாரம் புதிய அரசியலமைப்பு தொடர்பில் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இங்கே காணப்படும் படத்தில் அனைவரும் காணப்படுகின்றனர்.

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் பரமேஸ்வரன் பிரசோதன் 186 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில்




- ந.லோகதயாளன்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் 186 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

2024 ஆம் ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு 22ம் திகதி மாலை வெளியாகியது. இதில் இதுவரை கிடைத்த தரவுகளின் அடிப்படையில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் பரமேஸ்வரன் பிரசோதன் 186 புள்ளிகளைப் பெற்று சாதனை புரிந்துள்ளார்.

இதேநேரம் யாழ் தொன் பொஸ்கோ மாணவர் ஒருவர் 185 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

# பலாலி – யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கத்துக்கான கலந்துரையாடல் வடக்கு மாகா ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், விமான சேவைகள் நிறுவனத்தினருக்கும் இடையில் நடைபெற்றது



பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கத்துக்கான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களுக்கும், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் 22-01-25 அன்று செவ்வாய்க்கிழமை மதியம் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் அடிப்படை கட்டுமானங்கள் மற்றும் வசதிகளை துரிதமாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர், முதல்கட்டத்தில் இந்தப் பணிகளை முழுமைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டனர்.

சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கம் முன்னெடுப்பதற்கு 114 ஹெக்டேயர் நிலப் பரப்பு சுவீகரிக்கப்பட வேண்டியுள்ளதாகவும் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் குறிப்பிட்டனர். கடலை நோக்கியதாக அந்த விஸ்தரிப்பு அமையும் எனவும் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர். காணிகளை சுவீகரிப்பதற்கு முன்னதாக 1986ஆம் ஆண்டு பலாலி விமான நிலையத்துக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகளுக்கு இன்னமும் இழப்பீடு வழங்கப்படவில்லை என ஆளுநர் சுட்டிக்காட்டினார். தற்போதைய பெறுமதிக்கு ஏற்ப அவர்களுக்கு இழப்பீடு முதல்கட்டமாக வழங்கிய பின்னரே தற்போது தேவைப்படும் மேலதிக காணிகளுக்காக சுவீகரிப்பை ஆரம்பிக்கலாம் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் விமான நிலையத்தின் விரிவாக்கத்தின்போது இந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகளவில் கிடைக்கும் என விமான நிலையம் மற்றும் விமான சேவைகளுக்கான நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

உள்ளூர் விமான சேவைகள் விரிவுபடுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது. கொழும்பு - யாழ்ப்பாணம், மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் சேவைகளை முன்னெடுப்பதற்கு, பயணிகளின் தேவைப்பாடு தொடர்பான துல்லியமான தகவல்களை வழங்குமாறு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

தற்போது சேவையை முன்னெடுக்கும் இண்டிகோ விமான சேவை நிறுவனம் சென்னை - யாழ்ப்பாணம் சேவைக்கு மேலதிகமாக பெங்களூர் - யாழ்ப்பாணம் சேவையை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் கௌரவ அமைச்சர் பிமல் ரத்நாயக்கா அவர்கள் இந்த மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளதாகவும் இதன்போது அபிவிருத்திக்கான நிதி மூலம் தொடர்பில் இறுதி செய்யலாம் என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண பிரதம செயலர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், தெல்லிப்பழை பிரதேச செயலர், இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பொங்கு தமிழ் பிரகடனத்தின் 25ஆம் ஆண்டில் ஒற்றையாட்சி நிராகரிப்பு

சுதந்திரமாக தமது அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கப் போராடும் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பான பொதுவான கோரிக்கைகளை உள்ளடக்கிய பொங்கு தமிழ் பிரகடனம் வெளியிடப்பட்டு 24 வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் திகதி பல்கலைக்கழகக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள பொங்கு தமிழ் நினைவுத்தூபிக்கு முன்பாக 24 வருட பூர்த்தி நிகழ்வுகள் இடம்பெற்றதாக பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அவ்வேளையில் பல்கலைக்கழகத்தில் பயிலும் தமிழ் மாணவர்கள் பலர் கலந்துகொண்டிருந்ததாகவும் அவர்கள் மேலும் குறிப்பிடுகின்றனர்.

பொங்கு தமிழ் பிரகடனம் அல்லது தமிழ் எழுச்சி பிரகடனம் ஜனவரி 17, 2001 அன்று வெளியிடப்பட்டது.

இந்த பிரகடனத்தில் சுயநிர்ணய உரிமை, பாரம்பரிய தமிழர் தாயகம், தமிழ் தேசியம் ஆகியவற்றின் அடிப்படையிலான தமிழ் மக்களின் ஒன்றுபட்ட அபிலாஷைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மைத்திரி - ரணில் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பை இலங்கையின் புதிய அரசமைப்புச் சட்டமாக ஏற்றுக்கொள்ளும் நோக்குடன் புதிய அரசாங்கம் செயற்பட்டு வருவதாக இதன்போது உரையாற்றிய யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் எஸ்.சிவகஜன் தெரிவித்தார்.

“தமிழ் மக்களுக்கான தீர்வு என்பது ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்கு உட்படாத 13ஆவது திருத்தத்திற்கு அப்பாற்பட்டது. உருவாக்கப்படலாம் என சொல்லப்படுகின்ற இலங்கையின் மூன்றாவது குடியரசு அரசியல் யாப்பில் ஏக்கிய ராஜ்ஜிய என்னும் பெயரிலே ஏற்கனவே நல்லாட்சிக் கால அந்த அரசு வரைந்த அந்த யாப்பினுடைய தொடர்ச்சியை மீளவும் வரைந்து தமிழ் மக்களினுடைய தலையில் மீளவும் தமிழ் மக்களின் பிரநிதிகளைக் கொண்டே இந்த யாப்பை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும் என்பதில் ஸ்ரீலங்கா அரசு மிகவும் முனைப்புடன் இருக்கின்றது.”





2016ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பேரவையினால் உருவாக்கப்பட்ட முன்மொழிவுகளே தமிழ் மக்களுக்கான சிறந்த தீர்வாக அமையும் என மாணவர் சங்கத் தலைவர் வடக்கிலுள்ள தமிழ் அரசியல்வாதிகளிடம் கடுமையாக வலியுறுத்தியுள்ளார்.

“இந்த நேரத்தில்தான் அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகளையும் நோக்கி ஒன்றை முன்வைக்கின்றோம். 13ஆவது திருத்தத்திற்கு உட்பட்ட ஏக்கிய ராஜ்ஜியவுடன் தொடர்புடைய எந்தவொரு அரசியல் அமைப்பு முயற்சிகளுக்கும் உடன்படாத அவற்றை எதிர்ப்பதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்ட தீர்வு திட்டம்தான் தற்போது வரையில் தமிழ் மக்கள் சாரந்து மிகப்பொருத்தமான சரியான தீர்வு திட்டமாக எங்கள் முன்னால் இருக்கிறது.”

இலங்கைக்கான புதிய அரசியலமைப்பு தயாரிப்பின்போது ஒற்றையாட்சியை நிராகரித்து, சமஷ்டி கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட யாப்பை உருவாக்குவதற்கு புதிய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் வடக்கில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இடையில் கடந்த வருட இறுதியில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

புதிய அரசியலமைப்பு தயாரிப்பில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்து கலந்துரையாடுவதே கலந்துரையாடலுக்கு தலைமை தாங்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நோக்கமாக இருப்பதோடு, 2016 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பேரவை முன்வைத்த முன்மொழிவுகளின் அடிப்படையில் இந்த பேச்சு நடைபெறுகின்றன.

மைத்திரி - ரணில் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு வரைபை இலங்கையின் புதிய அரசியல் அமைப்பாக ஏற்கவும், பௌத்தத்திற்கான முன்னுரிமையை பாதுகாக்கவும் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் விருப்பத்தை வெளியிட்டுள்ளது.

பொங்கு தமிழ் நினைவுத்தூபி

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முயற்சியில் 2018 செப்டெம்பர் 17 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொங்கு தமிழ் நினைவுத்தூபி திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அப்போதைய யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் இரத்தினம் விக்னேஸ்வரன், பொங்கு தமிழ் நினைவுத்தூபி தமிழ் மக்களின் உரிமைச் சின்னமாக அமையும் என தெரிவித்திருந்தார்.





# கிளிநொச்சி மக்கள் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகவும் வெள்ளத்தினால் பாதிப்பு!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கிளிநொச்சி மக்கள் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகவும் வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் மூன்றாவது முறையாகவும் திறக்கப்பட்டதன் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் ஐயன் கோயிலடி, ஊரியான், பெரியகுளம் கண்டாவளை உள்ளிட்ட பகுதிகளில் வயல் நிலங்களுக்கும் அழிவினை ஏற்படுத்தியுள்ளது.

வெள்ளப் பாதிப்பு காரணமாக குளங்களில் நீர்மட்டம் அதிகரித்தமையால் முதலைகளும் மக்கள் குடியிருப்புபகுதிகளுக்குள் புகுந்து பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக வீட்டிலோ அல்லது வெளியில் செல்வோர் தனிமையில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.



மேலும் வட்டக்கச்சி, பெரியகுளம் பகுதியில் இருந்து புளியம்பொக்கனை செல்லும் பிரதான வீதியில் வெள்ளம் குறுக்கரத்து பாய்வதன் காரணமாக கனரக வாகனங்கள் மாத்திரமே இவ்வீதி ஊடாக பயணிக்க கூடியதாக உள்ளது.

இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள் தமது கற்றல் செயற்பாட்டை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மழையுடன் கூடிய வானிலை இன்று குறைவடைந்தாலும், நீர்த் தேக்கங்களில் இருந்து வெளியேறும் நீர் மக்கள் குடியிருப்புக்களை ஊடறுத்து செல்வதால் மக்கள் மூன்றாவது முறையாகவும் வெள்ள பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.



# யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பொறியியல் பீட குடிசார் மற்றும் சுற்றாடல் சங்கத்தின் "த நெயில்" (The Nail) சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் குடிசார் மற்றும் சுற்றாடல் சங்கத்தின் முயற்சியில் உருவான "த நெயில்" (வூந யேடை) சஞ்சிகை வெளியீடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 23ம் திகதி வியாழக்கிழமையன்று காலை (23.01.2025) இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா சிறப்பு விருந்தினராகவும், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

ஆளுநர் தனது உரையில், முன்னைய காலங்களில் பொறியியலாளர்கள் பலர் இந்த மாகாணத்துக்காக அர்ப்பணிப்புடன் உழைத்திருந்தாலும் அவர்களின் அந்தக் கடின உழைப்புப்பற்றி எந்தவொரு ஆவணங்களும் எங்களிடம் இல்லை.

குறிப்பாக நாங்கள் அன்று தொடக்கம் யாழ்ப்பாணத்துக்கான ஆறு என்ற அடிப்படையில் ஆறுமுகம் திட்டம் தொடர்பில் பேசி வந்தாலும், அது தொடர்பில் முறையான - முழுமையான ஆவணங்கள் எங்களிடம் இல்லை.

ஆனால் தற்போது வெளியிடப்படும் "த நெயில்" சஞ்சிகை ஊடாக பொறியிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அனுபவங்கள் அனைவருக்கும் பகிரப்படுகின்றது. இது சிறப்பான முயற்சி. பாராட்டப்படவேண்டியது.

சவால்களை எதிர்கொள்ளாவிட்டால் எங்களின் ஆளுமையை விருத்தி செய்ய முடியாது. சவால்களை எதிர்கொள்ளும்போதுதான் அந்தச் சவால்களை நாங்கள் வெற்றிகொள்கின்றோம். அதன் ஊடாக எங்கள் ஆளுமைகளை மேலும் விருத்தியடையச் செய்துகொள்ளலாம். மிகப்பரந்துபட்ட அனுபவமானது எழுத்துமூலமான போதனையைவிட மேம்பட்டது.

மாணவர்களின் புத்தாக்க சிந்தனைக்கும் இடமளிக்கும் வகையில் அவர்களுடைய ஆக்கங்களையும் இந்த சஞ்சிகையில் உள்வாங்கியமை சிறப்பம்சமாகும். புத்தகக் கல்விக்கு அப்பால் பரிசோதனைகள் - பயிற்சிகள் மாணவர்களுக்கு முக்கியம். அது இல்லாமல் அவர்களது அறிவு முழுமையடையாது, என ஆளுநர் குறிப்பிட்டார்.





# வடக்கு மாகாணச் பொதுச் சந்தைகளில் நிலவும் 10ற்கு ஒன்று கழிவு நடைமுறை நீக்கப்படக் கூடியதா என்ற சர்ச்சை

இலங்கை செய்திகள்
Sri Lanka News

**- ந.லோகதயாளன்**

வடக்கு மாகாணச் சந்தைகளில் நிலவும் 10ற்கு ஒன்று கழிவு நடைமுறை நீக்கப்படக் கூடியதா என்ற சர்ச்சை மீண்டும் எழுந்துள்ளது.

வடக்கு மாகாணச் சந்தைகளிற்கு வரும் மரக்கறி வகைகளில் விவசாயிகளிடம் சந்தை வியாபாரிகள் 10ற்கு ஒன்றை கழிவாக எடுப்பதனால் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொள்வதாக கடந்த 10 ஆண்டுகளாக பலரும் சுட்டிகாட்டியபோதும் அதனை இன்றுவரை தடுக்க முடியாமல் இருந்து வருகின்றது. இந்த விடயம் தொடர்பில் கடந்த ஆண்டு இறுதியில் கருத்துரைத்த வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் 2025ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து 10ற்கு ஒன்று கழிவு நடைமுறை அகற்றப்படும் எனத் தெரிவித்தபோதும் அது இதுவரை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

வடக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் வடக்கின் விவசாய அமைச்சரான பொ.ஐங்கரநேசன் இதேபோன்ற கண்டிப்பான உத்தரவை பிறப்பித்தபோதும் அன்றும் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல்போனது மட்டுமன்ற அந்த அறிவிப்பை நடைமுறைப்படுத்தச் சென்ற அதகாரிகள்தான் தமது விற்பனைக்கே தடையாக இருப்பதுபோன்று வியாபாரிகள் அன்றி விவசாயிகளும் கருத்துரைத்தனர்.

இப்போது வடக்கு ஆளுநரின் கருத்து தொடர்பில் திருநெல்வேலிச் சந்தையில் கடந்த 23 ஆண்டுகளாக மரக்கறி விற்பனையில் ஈடுபடும் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் நாம் 10ற்கு ஒன்றே அல்லது 100ற்கு 6 அல்லது 7 கிலோ மேலதிகம் வரும்போது அதனை நீக்கி பணம் வழங்கும்போது நாமும் விவசாயியும் இணங்கியே பொருள் கொள்வனவில் ஈடுபடுகின்றோம். 10ற்கு ஒன்று கழிக்கவே முடியாது என்பவர்கள் நாம் மொத்தமாக 100 கிலோ வாங்கினால் அரைக்கிலோ கால் கிலோ ஒரு கிலோவாக விற்கும்போது 90 அல்லது 95 கிலோவே விற்க முடியும், இதனைவிட கழிவு, முற்றல், சேதாரம் அனைத்தும் காணப்படும் அதனை எவ்வாறு ஈடு செய்வது எனக் கேள்வி எழுப்பினார்.

இதேநேரம் சாவகச்சேரியில் 16 ஆண்டுகளாக விற்பனையில் ஈடுபடும் கல்வயலைச் சேர்ந்த வியாபாரி கருத்து கூறும்போது இதனை நடைமுறைப் படுத்துமாறு விவசாயிகளே அதிகம் குரல் எழுப்பாதபோது அதிகாரகளே தூ ண்டி விடுவதாக தெரிகின்றது. ஒருவேளை விவசாயிகள் கோருகின்றனர் என்று வைத்தால் சகல சந்தைகளிலும் 5 இடங்களை விவசாயிகளிற்கு ஒதுக்கி வழங்குங்கள் அதிலே விவசாயி தனது உற்பத்தியை சந்தை வரியை செலுத்தி தானே விற்பனை செய்யட்டும். அதன் பின்பு விவசாயியே வியாபாரிகளின் நிலையை அறிந்துகொள்வார்கள். அதற்காக விவசாயிகளிற்கு இது தொடர்பில் அறிவு கிடையாது என நாம் ஒருபோதும் கூற மாட்டோம். ஆனால் அதிகாரிகளிற்கு இதுதொடர்பில் அறிவு இல்லை எனக் கூற முடியும் என்றார்.

இதேநேரம் மாகாண சபை ஆட்சிக் காலத்தில் ஓர் குளப்பம் ஏற்பட்ட சந்தையான மருதனார்மடம் சந்தை வியாபாரி ஒருவர் இதுதொடர்பில் கூறுகையில் ஓர் நிர்வாகத்தில் பிரச்சணை காணப்பட்டால் இரு தரப்பையும் அழைக்கின்றீர்ள், அண்மையில் தனியார் பேரூந்தும் இ.போ.சபையும் இணைந்த சேவையை நடாத்த வேண்டும் என்பது தொடர்பான பிரச்சணைக்கும் இரு தரப்பையும் அழைக்கும் ஆளுநர் எமது விடயத்திற்கு மட்டும் ஏன் ஒரு தரப்பை மட்டும் வைத்து தீர்ப்பு கூறுகின்றார்.

இந்த நாட்டில் ஓர் கொலைக் குற்றவாளியாக இருந்தாலும் அவரின் கருத்தைக் கூற நீதிமன்றங்களே சந்தர்ப்பம் அளிக்கும்போது 25 வருட நிர்வாக அதிகாரி மட்டுமன்றி எமது அயல் கிராம அதிகாரியான ஆளுநர் ஒரு தரப்பின் கருத்தைக் கேட்டு ஒரு முகமாக தீர்ப்பளித்து விட்டார் என்கின்றார்.

சுன்னாகம் சந்தையில் மரக்கறி விற்பனைய்யில் ஈடுபடும் ஓர் தாயார் கருத்துக் கூறும்போது தூக்கிலே பொருளிற்கு விலை நிர்ணயம் செய்யும்போது வெளித்தோற்ற பொருளை வைத்தே தீர்மானிக்கின்றோம். பின்பு விற்பனை செய்நும் இடத்தில் கொட்டும்போது கத்தரிக்காயில் சூத்தை, வெண்டிக்காயில் முத்தல், முருங்கக்காய் முத்தல், மரவள்ளிக் கிழங்கு வேர் என எவ்வளவோ கழிவு ஏற்டும் இவற்றை எல்லாம் தவிர்க்கவே இந்த கழிவு முறை பின்பற்றப்படுகின்றது. இதனை நீக்க வேண்டுமானால் கொண்டு வரும் மரக்கறிகளை கீழே கொண்டி அதன் பின்பு தெரிவு செய்து எடித்து கூற விவசாயிகள் அனுமதிப்பார்களா அதுவும் முடயாத காரியம் ஏனெனில் 4 மணி முதல் விவசாயிகள் மரக்கறிகளை கொண்டு வருவார்கள் நாம் மரக்கறியில் இருக்கும் நம்பிக்கையை விடவும் அதனை கொண்டு வரும் விவசாயி மீது உள்ள நம்பிக்கையோடு இந்த கழிவும் ஈடு செய்யும் என்ற நம்பிக்கையிலேயே மரக்கறியை கொள்வனவு செய்கின்றோம் என்றார்.

இவ்வாறெல்லாம் விவசாயிகள் கூறுவது தொடர்பில் உரும்பிராயை சேர்ந்த விவசாயி இராசதுரை நாகராசா கூறுகையில்,

10ற்கு ஒன்று கழிவு நடைமுறை இலங்கைநிலேயே வடக்கில் மட்டும்தானே உள்ளது. அவ்வாறானால் ஏனைய மாகாணத்தில் வியாபாரிகளே இல்லையா அல்லது அங்கே உற்பத்மி செய்நும் பொருள்களில் மட்டும் சேதாரமே ஏற்படாதா என்பதற்கான பதிலினையும் வியாபாரிகளே பதிலளிக்க வேண்டும். வாழைக் குழைகளிற்கு ஒரு கழிவு கோரினால் அதில் ஓர் நியாயம் உண்டு. அனைத்துப் பொருள்களிற்குமே கோருவதனை ஏற்க முடியாது என்றார்.

கோண்டாவிலைச் சேர்ந்த கத்தரி சிறி என அழைக்கப்படும் ந.சிறீஸ்கந்தராயா கருத்து தெரிவிக்கையில் நானும் 35 ஆண்டுகளாக விவசாயமே மேற்கொள்கின்றேன் இந்த கழிவு முறையை மட்டும் நீக்க முடியவில்லை. தற்போது தேங்காயும் கிலோவிற்கு வந்து விட்டது அப்படியானால் தேங்காயிலும் இந்த கழிவை கோருவார்களா. உள்ளூர் உற்பத்தியில் கழிவு கோரும் விவசாயிகள் இங்கிருந்து சென்று தம்புள்ள சந்தையில் கொள்வனவு செய்து வரும் மரக்கறிகளில் கழிவைப் பெற முடியுமா என்றார்.

இவை தொடர்பில் சுன்னாகத்தைச் சேர்ந்த விவசாயியான இராசையா கருத்து தெரிவிக்கையில்,

விவசாயம் செய்யும் எம்மால் சந்தையில் இருந்து ஒரு கிலோ அரைக் கிலோவாக நெறுத்து விற்று வந்து தோட்டத்தை கவனிக்க முடியாது என்பதனை அறிந்தும், சில்லறையாக விற்பனை செய்வதற்கான தொடர்பாடலிற்கு காத்திருப்பதில்லை என்பதனாலே எமக்காக அமைக்கப்படும் உழவர் சந்தைகளை நாம் பயன்படுத்துவதில்லை. மாறாக உழவர் சந்தை அல்லது தோட்டங்களிலேயே விற்பனைகளை அதிகரித்தால் இந்த 10ற்கு ஒன்று கழிவு முறை தானாகவே அகலும் என்றார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மூத்த எழுத்தாளர்களுக்கு வள்ளுவர் விருது வழங்கி திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கம் கௌரவிப்பு



திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கம் நடத்திய பொங்கல் திருநாள் மற்றும் மூத்த எழுத்தாளர்களுக்கு வள்ளுவர் விருது வழங்கும் விழா 21-01-2025 அன்று திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம் குளிர்மை சிற்றரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கம் சிறப்புத் தலைவர் சௌமா. இராஜரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செயலாளர் நந்தவனம் சந்திரசேகரன் முன்னிலை வகித்தார். பொதுச்செயலாளர் வை. ஜவஹர் ஆறுமுகம் அறிமுக உரையாற்ற, திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கத் தலைவர் கவிஞர் த. இந்திரஜித் வரவேற்புரையாற்றினார்.

சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்ட வரலாற்று ஆய்வாளர். கவிஞர் ஜீவபாரதி திருச்சி மாவட்டத்தின் மூத்த எடுத்தாளர்கள் திருக்குறள். சு.முருகனந்தம், திருக்குறள் புலவர் நாவை சிவம், கவிஞர் மணமேடு குருநாதன், எழுத்தாளர் மழபாடி ராஜாராம் ஆகியோருக்கு வள்ளுவர் விருது வழங்கிச் சிறப்பித்தார்.

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்க அமைச்சர் பெ. உதயகுமார், பத்ம ஸ்ரீ மா.சுப்ராமன், கவிஞர் வி. கோவிந்தசாமி, திருச்சிமா வட்ட எழுத்தாளர் சங்க துணைத்தலைவர் சூர்யா சுப்ரமணியன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிறைவாக அமிர்தம் சமூக நல அறக்கட்டளைத் தலைவர் யோகா விஜயகுமார் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார் கவிஞர் ஆங்கரை பைரவி நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.



# "எமது தாயக மண்ணை ஒரு வளமிக்க தேசமாக உருவாக்க புலம் பெயர் உறவுகள் பலர் ஆர்வத்துடன் செயற்படுகின்றார்கள்"

## இளவாலையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் "அனைத்துலக தமிழர் பேரவை"யின் தலைவரும் கனடா வாழ் அரசியல் செயற்பாட்டாளருமான நிமால் விநாயகமூர்த்தி தெரிவிப்பு

"எமது தாயக மண் பல ஆண்டு கால யுத்தத்தின் காரணமாக வடுக்களும் சோகமும் வறுமையும் நிறைந்த ஒரு பிரதேசமாக காணப்படுகின்றது எனவே எங்கள் பிறந்த மண்ணை ஒரு வளமிக்க தேசமாக உருவாக்க புலம் பெயர் உறவுகள் பலர் ஆர்வத்துடன் செயற்படுகின்றார்கள். அதற்காக பலர் திட்டங்களைத் தயாரித்துள்ளார்கள். இந்த வகையில் யாழ்ப்பாணம் இளவாலைக் கிராமத்தில் இயங்கிவரும் வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உறுப்பினர்கள் மக்கள் சேவையில் முன்னின்று பல பணிகளை ஆற்றிவருகின்றார்கள். அவர்கள் ஏற்பாடு செய்த இவ்வருடத்தின் பொங்கல் விழாவில் நானும் ஒருவனாக் கலந்து கொண்டு உங்கள் மத்தியில் உரையாற்றுவதை ஒரு பெருங்கடமையாகக் கருதுகின்றேன்".

இளவாலையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் "அனைத்துலக தமிழர் பேரவை"யின் தலைவரும் கனடா வாழ் அரசியல் செயற்பாட்டாளருமான நிமால் விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

கடந்த 14-01-2025 அன்று பொங்கல் தினத்தன்று நடைபெற்ற மேற்படி விழாவில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டார்கள். அன்றையதினம் மேடையில் பல பாடசாலை மாணவ மாணவிகளுக்கு கற்றல் உபகரணங்களையும் "அனைத்துலக தமிழர் பேரவை"யின் தலைவரும் கனடா வாழ் அரசியல் செயற்பாட்டாளருமான நிமால் விநாயகமூர்த்தி வழங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.






YOU MAY BE SURPRISED TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER

CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS

PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE

NON MEDICAL LIFE INSURANCE

| AGE | 25000 | | 50000 | |
|---|---|---|---|---|
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |



Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5772 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4

# யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழி மூன்றாவது இடத்தில் உள்ளதை பார்த்து அதிர்ச்சியுற்றேன் என்கிறார் அமைச்சர் சந்திரசேகரன்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

புு. கஜிந்தன்



யாழ்ப்பாணத்தில் திருவள்ளுவர் கலாச்சார மத்திய நிலையத்தின் பெயர்ப் பலகையில் தமிழ் மொழிக்கு மூன்றாவது இடம் கொடுக்கப்பட்டிருந்ததை பார்த்து தான் அதிர்ச்சியுற்றதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

20ம் திகதி அன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் - பலாலி வீதி, கந்தர் மடப்பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் காரியாலயத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசின் நிதி பங்காளிப்புடன் திறந்து வைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாச்சார மையமானது திருவள்ளுவர் கலாச்சாரம் மையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வில் நானும் அதிதியாக கலந்து கொண்டவன் என்ற வகையில் பெயர் மாற்றம் தொடர்பில் திரை நீக்கத்தின் போது தான் அவதானித்தேன்.

திருவள்ளுவர் கலாச்சார மையம் எனப் பெயர் மாற்றியது குற்றம் அல்ல. யாழ்ப்பாணத்திற்கே உரித்தான பெயர்களான யாழ். கலாச்சார மையம் அல்லது யாழ். பண்பாட்டு மையம் என்ற பெயர் சூட்டியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

பெயர் சூட்டும் நிகழ்வில் திருவள்ளுவர் கலாச்சார மையம் என காட்சிப்படுத்தப்பட்ட இலத்திரனியல் திரையில் தமிழுக்கு மூன்றாவது இடம் வழங்கப்பட்டமை கவலை தரும் விடயமாக இருந்தது. அதனைப் பார்த்து நான் அதிர்ச்சியடைந்தேன்.

தமிழ் மக்கள் வாழும் பகுதியில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். சில வேளை தெரியாமல் சில தவறுகள் இடம்பெற்று இருக்கக்கூடும்.

குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் நான் இன்னும் கலந்துரையாடவில்லை. நிச்சயமாக அது தொடர்பில் கலந்துரையாடி இனிவரும் காலங்களில் தவறுகள் இடம்பெறா வண்ணம் செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக இலங்கை நிதியமைச்சர் தெரிவித்த கருத்திற்கு மணிவண்ணன் கண்டனம்!



அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிதியமைச்சர் தெரிவித்த கருத்திற்க்கு முன்னாள் யாழ்ப்பாணம் மாநகர சபை முன்னாள் மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

22-01-2025 அன்று பதன்கிழமை வடமராட்சி பருத்தித்துறை பகுதியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். விபரங்களுக்கு இங்கு காணப்படும் இணைப்பை அழுத்தவும்.

# யாழ்ப்பாணத்தில் வீதியால் சென்ற குடும்பஸ்தர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழப்பு!

22ம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் - றொட்டியாலடி வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் திடீரென கிழே விழுந்து உயிரிழந்துள்ளார். செட்டிவளவு, இணுவில் மேற்கு பகுதியை சேர்ந்த சபாபதிப்பிள்ளை நித்தியானந்தம் (வயது 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் அன்று மாலை மோட்டார் சைக்கிளில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்தவேளை கீழே மயங்கி விழுந்துள்ளார். இதன்போது அந்த வீதியால் வந்தவர்கள் அவரை தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவளை அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மாரடைப்பு காரணமாக மரணம் சம்பத்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

# மூச்சு எடுக்க சிரமப்பட்ட இளம் குடும்பப் பெண் யாழ்ப்பாணத்தில் பரிதாபமாக உயரிழப்பு!

யாழ்ப்பாணத்தில், மூச்சு எடுப்பதற்கு சிரமப்பட்ட பெண் ஒருவர் 22ம் திகதி புதன்கிழமையன்று உயிரிழந்துள்ளார். இதன்போது மூளாய் - வேரம் பகுதியை சேர்ந்த தர்சன் பாமினி (வயது 36) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறைந்த குடும்பப் பெண்ணுக்கு அன்றையதினம் (22) மூச்சு எடுப்பதில் சிரமம் ஏற்பட்டது. இந்நிலையில் அவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதன வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அன்றையதினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். நாட்பட்ட நுரையீரல் அடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

# மட்டக்களப்பில் வேளாண்மை வெள்ளத்தில் மூழ்கிய முழு பொறுப்பும் அரச நிருவாகமும் அரசும் பொறுப்பேற்க வேண்டும் என்கிறார் இரா.துரைரட்ணம்

மட்டக்களப்பில் மழை வெள்ளத்தினால் பல் ஆயிரக்கணக்கான ஏக்கர் வேளாண்மை நீரில் மூழ்கி பல கோடிக்கணக்கான ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதுடன் மக்கள் இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டுள்ளனர் இதனால் எதிர்காலத்தில் பிச்சை எடுக்க வேண்டிய நிலைக்கு மாற்றியுள்ளதுடன் விவசாயிகள் கடனை எவ்வாறு கட்டுவது நஞ்சு குடித்து சாவதா அல்லது தூக்கு போடுவதா என சொல்லான துன்பத்தில் உள்ளனர் எனவே வெள்ளம் தேங்கி நிற்பதற்கான முழு பொறுப்பையும் அரச நிருவாகமும் அரசும் பொறுப்பெடுத்தாக வேண்டும் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உடனடியாக நஷ்டஈடு வழங்க வேண்டும் என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிகரை வீதியிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எப் காரியாலயத்தில் 20ம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்று ஊடகமாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார். மாவட்டத்தை பெறுத்தளவில் இந்தவருடம் தென்னிலங்கையில் கூடுதலாக பெய்த மழை காரணமாக அந்த பகுதியிலுள்ள பல குளங்கள் திறக்கப்பட்டதுடன் மட்டக்களப்பு மாவட்டத்திலும் பல குளங்கள் திறக்கப்பட்டு இன்று வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றது.

இந்த இயற்கை அனர்த்தம் தொடர்பாக காலநிலை மாற்றத்தினால் கடந்த 20ம் திகதிக்கு பின்னர் மாவட்டத்திலும் நாடு பூராகவும் கன மழை பெய்யும் என அரசாங்ககத்தால் மாவட்டத்தில் அறிவிக்கப்பட்ட நிலையில் அரச நிருவாகங்கள் மற்றும் இந்த புதிய அரசு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சில வயல் நிலங்களை தடுத்திருக்க முடியும்.

ஆனால் அவர்கள் அதை செய்யவில்லை எனவே இந்த பாதிக்கப்பட்ட வயல் விடையங்களில் பொறுப்பு கூறவேண்டிய பொறுப்பு அந்தந்த திணைக்களத்தையும் அரசையும் சாரும் எனவே பாதிக்கப்பட்ட வயல் நிலங்களுக்கு அரச நிருவாகங்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

அதேவேளை விவசாய அமைப்புக்களில் இருக்கின்ற ஒரு சிலர் முரண்பாடு காரணமாக பல வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதை நாங்கள் அறியமுடிகின்றது கருத்து சொல்வது என்பது வேறு முடிவு எடுப்பது என்பது வேறு அனைவரும் கருத்துக்களை கேட்டு அரசாங்க அதிபர் எதிர்காலத்தில் அனர்தம் ஏற்படும் என விடும்பட்சத்தில் அரச திணைக்களம் உடனடியாக விரைந்து விசேட கூட்டங்களை நடாத்தி பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை அடையாளப்படுத்தி அந்த வேளாண்மை அறவடை செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தால் கூடுதலான சேதம் ஏற்படுத்த யிருக்காது.



அதுமட்டுமல்ல முன்கூட்டியே இந்த விடையம் பலருக்கு தெரிந்தும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வேளாண்மை தண்ணீரில் மிதக்கின்றது இயற்கையால் மழைபெய்து அழிவுகள் நடக்கும் சில விடையங்களை நிறுத்த முடியாது ஆனால் சில செயற்பாடுகள் சம்மந்தமாக விவசாய திணைக்களம், அரசாங்க அதிபர், சில விவசாய அமைப்புக்களின் செயற்பாடுகளை நேர்தியாக மேற்கொண்டிருந்தால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வேளாண்மை பாதிப்பில் இருந்து காப்பாற்றியிருக்க முடியும்.

மாவட்டத்தில் எப்போது நெல்அறுவடை செய்கின்றதே அன்றில் இருந்து நெல்லை கொள்வனவு செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கின்றது அதை விடுத்து சிங்கள பகுதிகளில் நெல்லை அறுவடை செய்யும் காலத்தில் நெல்லை கொள்வனவு செய்வது ஏற்புடையதல்ல.

கடந்த அரசாங்கத்தால் விவசாயிகள் நெல்லை கொள்வனவு செய்யும் பிரச்சனைக்கு பல தரப்பட்ட முரன்பாட்டிற்கு முகம் கொடுத்தவர்கள் இருந்தபோதும் நல்லாட்சி புரிகின்ற இந்த புதிய அரசு இதுவரை நெல்லை கொள்வனவு செய்யும் நடவடிக்கை ஏன் எடுக்கப்படவில்லை?

எனவே பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உடனடியாக அரசாங்கம் அவர்களுக்கான நஷ்டஈடு வழங்க ஈடுபடவேண்டும் அதேவேளை அறுவடை செய்யவுள்ள நெல்லை இதுவரைக்கும் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கையை அரசாங்கம் செய்யவில்லை நெல்லை கொள்வனவு செய்யவேண்டும் என அவர் தெரிவித்தார்.

# தமிழர்களே தமிழர்களே?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**நா**டாளுமன்றத்தில் சிறீதரன் சுமந்திரனுக்கு எதிராக உரையாற்றியிருக்கிறார். கட்சியின் உள் முரண்பாடு நாடாளுமன்றத்திலும் பிரதிபலித்திருக்கின்றது. ஒரு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் வைத்து முறைப்பாடு செய்வது அநேகமாக இதுதான் முதல் தடவையோ தெரியவில்லை.

விமான நிலையத்தில் சிறீதரன் சிறிது நேரம் மறித்து வைக்கப்பட்டமை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பதில் சொல்ல வேண்டும். அதேசமயம் அது தொடர்பாக சுமந்திரன் தெரிவித்த கருத்துக்களுக்கு சுமந்திரன் பதில் சொல்ல வேண்டும். அந்தக் கருத்துக்கள் சரியா பிழையா என்பதனை விமான நிலைய நிர்வாகம் வெளிப்படுத்த வேண்டும். இது தொடர்பான விசாரணைகளை நடத்தி உண்மையை வெளியே கொண்டு வர வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. அதேசமயம் இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சிக்குள் நிலவும் தலைமைத்துவ முரண்பாடும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதுதான் இங்கே இக்கட்டுரையின் குவிமையம்.

விவகாரம் நாடாளுமன்றம் வரை வந்துவிட்டது. ஏற்கனவே அது நீதிமன்றம்வரை சென்று விட்டது. இனி அதை ஐநா மனித உரிமைகள் உரிமைகள் சபைக்கும் எடுத்துச் செல்லலாமா? அல்லது பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லலாமா?

நாடாளுமன்றத்தில் சிறீதரன் நியாயம் கேட்கின்றார். ஸ்ரீலங்காவின் இன அழிப்புச் சட்டங்களை நிறைவேற்றிய ஒரு நாடாளுமன்றத்தில் அவர் தன்னுடைய கட்சிக்காரருக்கு எதிராக முறைப்பாடு செய்கிறார்.

எந்த நாடாளுமன்றத்தில் தமிழ்த் தரப்பு நீதி கேட்டுப் போராடுகின்றதோ, அதே நாடாளுமன்றத்தில் கட்சியின் உள் முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றது. தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இது ஒரு வீழ்ச்சி. இது முதலாவது சம்பவம்.

அடுத்த சம்பவம் சில வாரங்களுக்கு முன் இடம்பெற்றது. கிளிநொச்சியில், கனகபுரம் துயிலும் இல்லத்தில் இடம்பெற்றது. புனர்வாழ்வு பெற்ற முன்னாள் இயக்கத்தவர்கள் சிலர் கனகபுரம் துயிலும் இல்லத்தை தாமும் நிர்வகிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்களுக்குத் தலைமை தாங்குபவர் இரண்டு கண்களையும் இழந்தவர். அத்துயிலும் இல்லம் கடந்த 15 ஆண்டுகளாக சிறீதரனுக்கு விசுவாசமானவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இரண்டு கண்களையும் இழந்த அந்த முன்னாள் இயக்கத்தவரும் உட்பட அவரோடு சம்பந்தப்பட்டவர்களுக்கும் சிறீதரனின் ஆதரவாளர்களுக்கும் இடையே அங்கு பலமான வாக்குவாதம் நடந்தது. முடிவில் பொலீசார் தலையிட்டு இரண்டு பகுதியையும் சமாதானப்படுத்தினார்கள்.

இதில் சம்பந்தப்படும் இரண்டு தரப்புகளுமே போரால் பாதிக்கப்பட்டவர்கள். இதில் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளிலுமே புணர் வாழ்வு பெற்ற போராளிகள் உண்டு. துயிலும் இல்லங்களை ஒரு பொதுவான நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று ஒரு தரப்பு கேட்கின்றது. இன்னொரு தரப்பு அதை ஏற்கனவே நிர்வாகித்தவர்களே தொடர்ந்தும் நிர்வகிக்க வேண்டும் என்று கூறுகிறது. இதில் யார் சொல்வது சரி என்று விவாதத்தைப் பிறகு வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் இது தொடர்பாக ஏற்பட்ட மோதலில் முடிவில் போலீசார் தலையிட வேண்டி வந்தது. எந்தப் போலீஸ் கட்டமைப்பை இன அழிப்பை முன்னெடுத்த ஸ்ரீலங்கா படைக்கட்டமைப்பின் ஒரு பகுதியாக தமிழ்த் தேசியவாதிகள் வர்ணிக்கின்றார்களோ, அதே போலிஸ் கட்டமைப்பு ஒரு துயிலுமில்ல விவகாரத்தில் தலையிட்டு இருதரப்பையும் சமரசப்படுத்த வேண்டிய நிலை. இது இரண்டாவது சம்பவம்.

துயிலுமில்லங்களின் விவகாரத்தில் மட்டுமல்ல, ஏற்கனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அம்மாக்களின் விடயத்திலும் ஒரு மோதல் ஏற்பட்டபொழுது அவர்கள் பொலீசாரிடம் சென்று முறையீடு செய்தார்கள்.

யாரிடம் எதற்காக முறையீடு செய்வது என்பது தொடர்பாக தெளிவான அரசியல் பார்வை இல்லாத ஒரு சூழல்.

மேற்கண்ட இரண்டு சந்தர்ப்பங்களிலும் மோதல் யாருக்கு இடையில் என்று பார்த்தால், தமிழ்த் தரப்புக்களுக்கிடையில் தான். யாரிடம் போய் முறையிடுகிறார்கள் என்று பார்த்தால், யாருக்கு எதிராக நீதியைக் கேட்கின்றார்களோ அவர்களிடம்தான். தமிழ் அரசியல் எங்கே போய்க்கொண்டிருக்கிறது? தமிழ் அரசியல் என்று சொல்வதை விடவும் தமிழ்ச் சமூகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது? என்று கேட்பதுதான் அதிகம் பொருத்தமானது.

ஏனென்றால் கனடாவில் உள்ள ஒரு கோவிலில் இரண்டு அணிகள் மோதிக்கொண்ட காட்சி காணொளியில் வெளிவந்தது. அவர்கள் எவ்வளவு ஆக்ரோ'மாக மோதிக் கொள்கிறார்கள்? அதில் முடிவில் போலீசார் தலையிடுகிறார்கள். அது கனேடியப் பொலீஸ். ஆனால் அந்த விவகாரம் ஒரு கோவில் சம்பந்தப்பட்ட, கடவுள் சம்பந்தப்பட்ட விவகாரம். கடவுளின் சன்னிதானத்திலேயே ஒற்றுமையாக முடிவுகளை எடுக்க முடியாத ஒரு சமூகமாக தமிழ் மக்கள் மாறி வருகிறார்கள்.

கனடாவில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான பெரிய ஆலயங்களுக்கு ஏதோ ஒரு வழக்கு இருக்கின்றது. அண்மையில் சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நூறாண்டு நினைவையிட்டு நடந்த ஒரு வைபவத்தில், உரை நிகழ்த்திய வட மாகாண சபையின் ஆளுநர் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்...

"ஆலயங்கள் இப்பொழுது சமூக சேவைக்கு செலவழிப்பதை விடவும் வழக்குகளுக்கே அதிகமாகச் செலவழிக்கின்றன."

கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலும் கோவில் அறக்கட்டளைகளில் பிணக்குகளும் வழக்குகளும் உண்டு. எனக்குத் தெரிந்த ஒரு பேராசிரியர் கொழும்பில் வசிக்கிறார். சட்டம் பயிலும் தனது மகனிடம் சொன்னாராம், நீ கோவில் வழக்குகளை மட்டும் எடுத்தாலே போதும் வாழ்க்கை முழுவதும் உனக்கு உழைப்பு இருக்கும் என்று. அந்தளவுக்கு கோவில்கள் நீதிமன்றத்தில் நிற்கின்றன.

இந்துக் கோவில்கள் மட்டுமல்ல நவீன யாழ்ப்பாணத்தைச் செதுக்கிய திருச்சபைகளில் ஒன்று என்று வர்ணிக்கப்படுகின்ற தென்னிந்தியத் திருச்சபையும் நீதிமன்றத்தில் நிற்கின்றது.

கட்சியும் நீதிமன்றத்தில், கோவில்களும் நீதிமன்றத்தில், திருச்சபைகளும் நீதிமன்றத்தில், பழைய மாணவர் சங்கங்களும் நீதிமன்றத்தில், ஏன் தமிழ் மக்கள் தங்களுக்கு இடையிலான பிணக்கைத் தங்களுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள்? அல்லது அவ்வாறான பிணக்குகளைத் தீர்த்து வைக்கக்கூடிய மூத்த சமூகத் தலைவர்கள், மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், வழிகாட்டிகள், முன்னோடிகள் தமிழ்மக்கள் மத்தியில் இல்லையா?

இருக்கிறார்கள். ஆனால் எல்லாரையுமே "மீம்ஸ்" ஆக்கிவிடும் ஒரு போக்கு அதிகரித்து வருகிறது. சமூகத்தில் யார் துரத்திக் கொண்டு தெரிகிறார்களோ, யார் சமூகப் பணி செய்கிறார்களோ, யார் அர்ப்பணிப்பும் தியாகமும் மிக்க இறந்த காலத்தைக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களை அடுத்த தலைமுறை மதிப்பது குறைந்து வருகிறது. மூத்த, முன்னோடிகளாய் இருக்கின்ற, அனுபவஸ்தர்களை மதிக்காத ஒரு சமூகம் எப்படி உருப்படும்?

ஊடகங்களுக்குச் செய்திப் பசி. ஆனால் அந்த பசிக்கு தீனியாகக் கிடைத்திருப்பது தேசம். அந்த பசிக்கு இரையாகிக் கொண்டிருப்பது தேசத்தின் ஒருமைப்பாடு; தேசத் திரட்சி. ஒரு பகுதி ஊடகங்கள் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள உள் முரண்பாடுகளையும் அக முரண்பாடுகளையும் விடுப்பாக்கி, தமது உழைப்பைப் பெருக்கப் பார்க்கின்றன. கேட்டால் "ஜனநாயகம், நடுநிலைமை, ஊடக தர்மம்" என்று எல்லாம் கூறுகிறார்கள். எல்லா ஊடகங்களுக்கும் தர்மம் இருக்கிறதோ இல்லையோ அஜெண்டா இருக்கும். அது ஒரு உழைப்புக்கான அஜெண்டா. சிலசமயம் அந்த அஜெண்டாவுக்குப் பின் கட்சிகள் இருக்கலாம். கட்சிப் பிரமுகர்கள் இருக்கலாம். வேறு தரப்புகளும் இருக்கலாம். அஜெண்டா இல்லாத ஊடகங்கள் கிடையாது. குறைந்தபட்சம் "வியூவர்"களின் தொகையைக் கூட்டவேண்டும் என்ற அஜெண்டாவாவது இருக்கும்.

ஆனால் இந்த எந்த ஒரு அஜெண்டாவும் தேசத்தைத் திரட்டும் அரசியலுக்கு எதிரானது. தேசத்தை திரட்ட வேண்டும் என்று உழைக்கும் ஊடகங்கள் அதை நோக்கித்தான் நேர்காணல்களை எடுக்கும். காட்சிகளைக் காட்டும். கருத்துக்களை உருவாக்கும். யுடியூப்களில் தலைப்புக்கும் உள்ளடக்கத்துக்கும் இடையே உள்ள இடைவெளிக்குள் ஊடக தர்மம், தொழில்சார் ஊடகத் திறன்கள் எல்லாமே அழிந்து போகின்றன.

இவ்வாறாக, தேசத் திரட்சிக்கு வழிகாட்டாத ஊடகங்களின் தொகை பெருகிக்கொண்டு வரும் ஒரு சமூகம், மூத்தவர்களை அனுபவஸ்தர்களை சமூகப் பெரியார்களை மதியாத ஒரு சமூகம், தனக்குள் ஏற்படும் பிணக்குகளுக்கு எடுத்ததற்கெல்லாம் நீதிமன்றத்திற்குப் போகும் ஒரு சமூகம், தன் கட்சிக்காரருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் முறைப்பாடு செய்யும் ஒரு சமூகம், இன அழிப்புக்கு எதிராக நீதியைப் பெறுவதற்காக ஒன்று திரண்டு போராட முடியுமா?

ஒருபுறம் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலை. மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொருபுறம், சமூகத்துக்கு வழிகாட்ட வேண்டியவர்கள் கீழ்த்தரமாக விமர்சிக்கப்படுகிறார்கள். அல்லது வழிகாட்டிகளாக முன்னுதாரணமாக நிற்க வேண்டியவர்கள் நீதிமன்றத்திற்கு வழிகாட்டுகிறார்கள்.

இது இப்படியே போனால் தமிழ்ச் சமூகம் ஒரு தேசமாக நிமிர முடியுமா?

ஒரு காலம் முழு உலகத்தையும் திரும்பிப் பார்க்க வைத்த ஒரு சமூகம், பண்பாட்டுச் செழிப்பு மிக்க ஒரு நடுத்தர வர்க்கத்தைக் கொண்ட ஒரு சமூகம், இப்பொழுது ஏன் இப்படித் தூர்ந்து போகின்றது? தன்னுடைய பற்களை தானே கிண்டி மணக்கும் ஒரு சமூகமாக எப்படி மாறியது?

தாயகமும் புலம்பெயர்ந்த தமிழர்களும் இணைந்து இந்தச் சீரழிவைத் தடுக்க முன்வர வேண்டும். இந்தச் சீரழிவுக்குப் போரும் புலப்பெயர்ச்சியும் தலைமைத்துவ வெற்றிடமும் எதிரியுமே காரணங்கள்.

சமூகத்துக்காகத் தம்மை அர்ப்பணித்து போர் புரிந்தவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள். அல்லது காணாமல் ஆக்கப்பட்டு விட்டார்கள். அல்லது புலம் பெயர்ந்து ஓய்வு பெற்று விட்டார்கள். ஒரு சமூகத்துக்காகத் தம்மை அர்ப்பணித்து உழைப்பவர்கள்தான் அந்த சமூகத்தை ஒரு தேசமாகத் திரட்டலாம். அப்படிப்பட்டவர்களின் தொகை குறைந்துவிட்டது. எல்லாவற்றையும் தொழிலாக எடுத்துக் கொள்பவர்கள், எல்லாவற்றிலும் லாபத்தை எதிர்பார்ப்பவர்கள் அதிகரித்து விட்டார்கள். தியாகிளையும் தொண்டர்களையும் சுரண்டுபவர்கள் அதிகரித்து விட்டார்கள். அதன் விளைவுதான் மேற்கண்ட சீரழிவுகள் அனைத்தும்.

இப்பொழுது தமிழ் மக்களுக்குத் தேவையாக இருப்பது அவர்களை ஒரு சமூகமாக, ஆக்கசக்தி மிக்க ஒரு தேசமாகக் கட்டி எழுப்பும் தலைவர்களும் சமூக உருவாக்கிகளும் கருத்துருவாகிகளும் ஊடகவியலாளர்களும் அறிவு ஜீவிகளும் கலைஞர்களும்தான். தொழில்நுட்பத்தின் கைதியாகிவிட்ட ஒரு இளைய தலைமுறையை இலட்சியவாதிகளாக மாற்றவல்ல தலைவர்களும் முன்னுதாரணங்களும் வேண்டும். கட்சிகளால், அமைப்புகளால், ஊடகங்களால், ஆலயங்களால், திருச்சபைகளால், புலனாய்வுத் துறைகளால் சிதறடிக்கப்பட்டுவரும் ஒரு சமூகத்தைக் கூட்டிக் கட்டவல்ல, முன்னுதாரணம் மிக்க தியாகிகள் முன்வர வேண்டும்.

தமிழ் மக்கள் ஆஞ்சிநேயரைப்போல தமது பலம் எதுவென்று தெரியாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஒரே மூச்சில் சமுத்திரத்தைக் கடக்கும் பலம் மிக்க ஒரு சமூகம். அதை அவர்களுக்கு எடுத்துக்கூறவல்ல முன்னுதாரணம் மிக்க ஆளுமைகள் வேண்டும். தன் பலம் எதுவென்று அறியாமல், ஒருவர் மற்றவரை நம்பாமல், ஏன் தன்னைத்தானே நம்பாமல், சீரழியும் ஒரு சமூகத்திற்கு வழிகாட்டவல்ல தியாகிகள் முன்வர வேண்டும். தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் உள்ள ஆளுமைகள் இந்த விடயத்தில் அவசரமாக ஒன்று திரள வேண்டும். முன்னுதாரணங்களை உருவாக்க வேண்டும்.

கனடிய செய்திகள் Canadian News

# மார்க் கார்னி அவர்களை லிபரல் கட்சித் தலைவராக தேர்ந்தெடுப்பதன் மூலம், வலுவானதும், அதிக ஐக்கியமான கனடாவுக்கு ஒரு தெளிவான பாதையை எங்களால் அமைக்க முடியும்



### ஹரி ஆனந்தசங்கரி - மத்திய அமைச்சர் மற்றும் ஸ்காபுறோ ரூஜ்பார்க் தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினர்

## By Choosing Mark Carney, We Can Offer a Clear Path Forward for a Stronger, More United Canada

### Gary Anandasangare, Federal Minister and MP for Scarborough Park



The Liberal Leadership Race is more than a contest — it's an opportunity to shape the future of our party and country at a truly pivotal moment.

At a time when Canadians face significant challenges, strong leadership is needed to unite our country and bring real solutions. That's why I am proud to endorse Mark Carney as the next leader of the Liberal Party of Canada and our next Prime Minister.

As someone who's led on the world stage and helped save two economies in crisis, Mark understands what it takes to build a strong economy. He also knows what matters to families in places like Scarborough—Guildwood—Rouge Park and across Canada: good jobs, affordability, and a fair future for everyone.

With an election on the horizon, your voice has never mattered more. Canadians will soon face a critical decision: experience versus incompetence, a thoughtful plan versus empty slogans, and calm leadership versus chaos.

By choosing Mark, we can offer a clear path forward for a stronger, more united Canada.

Yours very truly,
Gary Anandasangaree

# MPP லோகன் கணபதி ஏற்பாடு செய்த வரவேற்பு உபசாரத்தில் கலந்து கொண்ட ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட்






கடந்த 21-01-2025 அன்று செவ்வாய்க்கிழமை ஒன்றாரியோ மாகாண அரசின் அங்கத்தவரும் பல்கலாச்சார உறவுகள் மற்றும் சிறுவர் நலன் பேணல் ஆகிய அமைச்சுக்களின் பாராளுமன்றச் செயலாளருமான லோகன் கணபதி அவர்கள் ஏற்பாடு செய்த வரவேற்பு உபசாரத்தில் கலந்து கொண்ட மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் அங்கு கலந்து கொண்ட தமிழ் பேசும் ஆதரவாளர்களோடு நெருக்கமாக உ ரையாடி மகிழ்ந்தார்.

இங்கு காணப்படும் படத்தில்வர்த்தகப் பிரமுகர் BEHIND ME INTERNATIONAL MEDIA ஊடக நிறுவன அதிபர் கனா செல்வராஜா மற்றும் அவரது துணைவியார் திபி மற்றும் வீடு விற்பனை முகவர் அமலன் அவர்கள் அவர்களோடு "உதயன் பிரதம ஆசிரியர் அவர்கள் முதல்வர் டக்போர்ட் அவர்களுக்கு கைலாகு கொடுத்து வாழ்த்துக்களைத் தெரிவிப்பதைக் காணலாம்.

அத்துடன் அங்கு உரையாற்றிய MPP லோகன் கணபதி அவர்களும் மற்றும் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்களும் தங்கள் உரைகளில் பல பயனுள்ள கருத்துக்களை முன்வைத்து உரையாற்றி சபையோரின் கரகோசத்தைப் பரிசாகப் பெற்றார்கள்.

அவர்கள் இருவரது உரைகளும் சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் அவர்களின் சிம்மாசன உரையின் போது தெரிவித்த கருத்துக்களும் அதற்கு முன்னதாக கனடா என்னும் தனித்துவமான தேசத்தையும் அதன் பிரதமரையும் விமர்சனம் செய்து தெரிவித்த தரமற்ற கருத்துக்களையும் விமர்சனம் செய்யும் வகையில் அமைந்திருந்தன.





குறிப்பாக "கனடா விற்பனைக்கு அல்ல" என்று MPP லோகன் கணபதி அவர்களும் முதல்வர் டக் போர்ட் அவர்களும் மறைமுகமாகப் பேசிய போது அதைப் புரிந்து கொண்ட சபையோர் கரகோசம் செய்தார்கள்.

அங்கு கலந்து கொண்ட பலர் வர்த்தக முன்னோடிகளாகவும் அரசியல்வாதிகளாக இருந்ததாலும். அன்றை நிகழ்வு களைகட்டிய ஒன்றாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

---

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கிளிநொச்சியைச் சேர்ந்த பெண் மருதானை காவல் நிலையத்தில் தற்கொலை

### உண்மைநிலை உடனடியாகக் கண்டறியப்படவேண்டும் என்கிறார் பொ.ஐங்கரநேசன்



மருதானை காவல் நிலையத்தில் தற்கொலை செய்துகொண்டதாக சொல்லப்படும் தமிழ்ப் பெண்ணின் மரணம் தொடர்பான உண்மைகள் உடனடியாக வெளிக் கொண்டுவரப்படவேண்டும் என்று தமிழ்த் தேசிப்ப பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மருதானை காவல் நிலையத்தில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் பெண்ணின் தற்கொலை தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்துள்ள செய்திக்குறிப்பிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தச் செய்திக்குறிப்பில், கிளிநொச்சியைச் சேர்ந்த 32 வயதுடைய பெண்ணொருவர் காவல்துறையால் கைது செய்யப்படு மருதானை காவல் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது 22ம் திகதி புதன்கிழமை இறந்துள்ளார். மருதானை காவல்துறையினர் இம்மரணத்தைத் தற்கொலை என்று தெரிவித்துள்ளதோடு, கஞ்சா வைத்திருந்ததாலேயே கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளனர்.

செய்தியறிந்து சடலத்தை பார்வையிட்ட தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் இம்மரணம் தொடர்பாகச் சந்தேகங்களை வெளியிட்டுள்ளனர்.

காலங் காலமாக ஸ்ரீலங்காவில் காவல்துறையினர் பொய்க் க்குற்றச்சாட்டுகளைச் சோடித்து வந்துள்ளநிலையில், இக்காவல்நிலைய மரணம் தொடர்பான உண்மை நிலையை வெளிக்கொண்டு வருவதற்கு எமது நாடாளுமன்ன உறுப்பினர்கள் விரைந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# கோப்பாய் பகுதியில் 13 வயது மாணவிக்கு பாலியல் துன்புறுத்தல் — 52 வயதுடைய ஆசிரியர் கைது!

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவியை பாலியல் ரீதியாக துன்புறுத்திய ஆசிரியரை கோப்பாய் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த 17 ஆம் திகதி, 13 வயதுடைய குறித்த மாணவியை அதே பாடசாலையில் கல்வி கற்பிக்கும் 52 வயதுடைய ஆசிரியர் பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக 22ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் சம்பவம் குறித்து நடவடிக்கைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிசார் சந்தேக நபரான ஆசிரியரை 23ம் திகதி அன்றையதினம் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ஆசிரியரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள்**
**ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24











NISSAN | VILLAGE NISSAN

**தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்**







**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT

905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN

25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com



# AQUA WELLNESS CENTRE LIMITED

REHABILITATION CLINIC


# INJURED?

## CALL US TODAY
## OVER 15 YEARS OF EXPERIENCE IN PERSONAL INJURY.

- EXTENDED HEALTH CARE ( DIRECT BILLING )

- WSIB
- SLIP & FALL
- PRIVATE CLIENTS
- SPORTS INJURY
- MOTOR VEHICLE ACCIDENT

KENEDY AND SHEPPARD AVE. E
OFF KENNEDY ROAD.





AQUA WELLNESS CENTRE LTD.
100 COWDRAY COURT SUIT 140
TORONTO, ON. M1S 5C8

T: 416-463-9090 C: 647-972-7126
F: 416-363-9090

Plan Design Build



Paramount Custom Homes Ltd.
Quality comes first

Build your Dream Home With Us

RESIDENTIAL / COMMERCIAL CONSTRUCTION ✓
ARCHITECTURAL DRAWINGS ✓
OBTAINING BUILDING PERMITS ✓
REZONING ✓
LAND SEVERANCE ✓
FINANCING FOR CONSTRUCTION ✓

EXPERIENCE - 10 + YEARS



Check out our showroom at 2400 MIDLAND AVE. UNIT 106
TORONTO, ON. M1S 5C1

416-335-5885

TARION CERTIFIED BUILDER

REGISTERED BUILDER · TARION · TARION WARRANTY CORPORATION

# மரண அறிவித்தல்

யாழ். பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Parisஐ வதிவிடமாகவும், ஐக்கிய அமெரிக்கா New Yorkஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் ஜெயகாந்தி அவர்கள் 20-01-2025 திங்கட்கிழமை அன்று ஐக்கிய அமெரிக்கா New York இல் இறைபதம் அடைந்தார்.

தோற்றம்: 18-01-1960
மறைவு: 20-01-2025



## திரு. சிற்றம்பலம் ஜெயகாந்தி

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் (காந்தி) - நல்லம்மா தம்பதிகளின் பாசமிகு நான்காவது புத்திரரும், சரவணமுத்து - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,
விக்னேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும்,
நிகாரிக்கா, ஆர்த்திகா, கிருத்திக் ஆகியோரின் பாசமிகு அப்பாவும்,
காலஞ்சென்றவர்களான ராதாகாந்தி, வனிதாகாந்தி, மற்றும் லலிதாகாந்தி, லதாகாந்தி, பிரபாகாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,
கலா, காலஞ்சென்றவர்களான தில்லைநடராஜா, அரியரெட்ணம், மற்றும் புஸ்பகாந்தன், மித்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,
காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, ஜெகசோதிமலர், சிறிஸ்கந்தராஜா, சத்திகுமார், மற்றும் செல்வமணி (ராணி), ஆனந்தவடிவேல், பேபிசறோஜா (பேபி), நித்தியானந்ததேவி (தேவி), உதயகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,
ஜேசன், யோசுவா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும்,
கஜானன் அவர்களின் பாசமிகு பெரியப்பாவும்,
சஞ்சீவ்காந்தி, சுகிர்தாகாந்தி, நிருத்திக்காகாந்தி, பிருந்தாகாந்தி, வர்ணாகாந்தி, நிசாகாந்தி ஆகியோரின் அன்பு மாமாவும்,
சாஸ்மி, விஹர்த்வித் (விகான்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

***அன்னாரின் பூதவுடல் 25-01-2025 சனிக்கிழமை மாலை 4:00 மணி தொடக்கம் 9:00 மணிவரையும், 26-01-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணி தொடக்கம் 10:00 மணிவரை 506 Lakeville Rd, New Hyde Park, NY 11040, United States இல் அமைந்துள்ள New Hyde Park Funeral Home இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் 26-01-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணி தொடக்கம் 11:00 மணிவரை நடைபெற்று, பின்னர் 132 Ronkonkoma Ave, Lake Ronkonkoma, NY 11779, United States இல் அமைந்துள்ள Nassau Suffolk Crematory Ltd இல் பி.ப. 12:00 மணிக்கு தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:
விக்னேஸ்வரி (மனைவி): (917) 539-0487 | நிகாரிக்கா (மகள்): (917) 859-8799 | புஸ்பன் (மைத்துனர்): (416) 894-1187
ரூபன் (சகோதரன்): (416) 918-4255 | லலிதாகாந்தி (சகோதரி): 947 6220431 | லதாகாந்தி (சகோதரி): (416) 779-2400




Hindu Parliament & Sanatana Hindu Sangha
Presents



KUMBH MELA
NORTH AMERICA 2025



MAHASHIVARATRI SNAN
TUESDAY, FEB 25th
KAILASA TORONTO
1960 Ellesmere Rd Unit 10, Scarborough, ON

GRAND AMRIT SNAN
SUNDAY FEB 2nd
KAILASA USA
9720 Central Ave, Montclair, CA

Other Snan Dates
Jan 28th Feb 11th

Learn More:
Organized with Hindu Temples across North America
Email: contact@nithyananda.ca
Call: (416) 439-2089

# சமரசமற்ற பேனாப் போராளி: ராவய விக்டர் ஐவன்!

**விடுதலைப் புலிகளுடன் சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்று 1994ல் சந்திரிக்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்தவர்களில் முக்கியமான ஒருவர்.**

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா - Australia**

**(இறுதிவரை மிகுந்த பரபரப்பான சர்ச்சைக்குரிய ஊடகவியலாளராகத் திகழ்ந்த விக்டர் ஐவன், தமிழ் பேசும் மக்களின் தேசிய சுய நிரணய உரிமைப் போராட்டத்தை அங்கீகாரம் செய்யாவிடினும், தனது இனத்தின், ஆளும் அரசுகளின் கொடுஞ் செயல்களை எதிர்த்து குரல் கொடுத்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது)**

**த**ற்போது ஆளும் தேசிய மக்கள் சக்தியின் முன்னைய ஜேவிபியின் ஆரம்பகால மிக முக்கியஸ்தரான விக்டர் ஐவன் (பொடி அத்துல - Victor Ivan) கண்டுகொள்ளப்படாத பேனாப் போராளியாக மரணித்துள்ளார்.

1971 ஆண்டு ஜேவிபியின் நாடுதழுவிய கிளர்ச்சியின் போது கொழும்பு மாவட்டத்துக்கான கிளர்ச்சிக்குழுவின் பொறுப்பாளராக செயற்பட்டவர் விக்டர். அவர் பிற்காலத்தில் ஜேவிபியுடன் கருத்து வேறுபாடு காரணமாக அதிலிருந்து வெளியேறி சுயாதீன பத்திரிகையாளராக செயற்படத் தொடங்கினார்.

"ராவய" என்ற சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராக அதன் தொடக்க காலத்திருந்து நீண்ட காலம் பணியாற்றியவர். நாட்டில் நடக்கும் ஊழல்களையும் தவறுகளையும் அம்பலப்படுத்த உறுதிபூண்ட சர்ச்சைமிகு பத்திரிகையாக ராவயாவை வளர்த்தெடுத்தார்.

### ஜேவிபியின் மூத்த உறுப்பினர்:

இறக்கும் போது அவருக்கு வயது 75. முதலாவது 1971 கிளர்ச்சியின் போது ஜேவிபியின் மூத்த உறுப்பினராக இருந்த அவர், பொடி அத்துல என்று அழைக்கப்பட்டிருந்தார். உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த பத்தி, செய்தித்தாள் எழுத்தாளரும், ராவயவின் ஆசிரியர் விக்டர் ஐவன் கராபிட்டிய மருத்துவமனையில் 19.01.2025 இல் காலமானார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் ஆட்சியில் இருந்த அரசுகளுடன் எப்போதும் சர்ச்சைக்குரிய பத்திரிகையாளராக விளங்கினார்.

தற்போது ஆளும் கட்சியில் முன்பு முக்கிய பொறுப்பில் இருந்தவர் இந்த விக்டர் ஐவன். ஆயினும் கடந்த ஆண்டு அவரது பத்திரிகையான ராவய நிறுவகத்தை இவரால் விற்பனை செய்யவோ, இடமாற்றம் செய்யவோ, வாடகை அல்லது குத்தகைக்கு விடவோ, இடிக்கவோ, அதன் வழியாக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அகற்றவோ, செய்தித்தாள் வெளியிடவோ கூடாது என கட்டாய தடை அறிவிப்புடன் கூடிய பல தடை உத்தரவுகளை விக்டர் இவான் எதிர்கொண்டு நீதிமன்றத்தால் எச்சரிக்கப்பட்டார்.

ராவய பத்திரிகையின் ஆசிரியராக கடமையாற்றிய விக்டர் ஐவன் 1949 ஜூன் 26ஆம் திகதி பிறந்தவர். கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். பத்திரிகை மற்றும் ஊடக சுதந்திரத்திற்கான அவரது அர்ப்பணிப்பு அவருக்கு பரவலான மரியாதையைப் பெற்றுத் தந்தது.

"ராவய" பத்திரிகை தொடங்கப்பட்டதிலிருந்து தொடர்ச்சியாக 25 ஆண்டுகள் அதன் ஆசிரியராகப் பணியாற்றினார். விக்டர் ஒரு புலனாய்வு பத்திரிகையாளர், அரசியல் விமர்சகர், கோட்பாட்டாளர், சமூக ஆர்வலர் மற்றும் பல புத்தகங்களையும் எழுதியுள்ளார்.

### அச்சமற்ற செய்தியாளர்:

1971 இளைஞர் கிளர்ச்சி தொடர்பான பிரதான நீதிமன்ற வழக்கில் அவர் 7ஆவது குற்றவாளியாக இருந்தார். சந்தேகத்துக்குரிய அனைத்து பிரதிவாதிகளிலும் மிகவும் வண்ணமயமான நபர் என்று நீதிபதிகள் குழு அவரை விவரித்தது. விசாரணையின் முடிவில் அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சிறைவாசத்தின்போது அவர் ஜே.வி.பி.யின் கோட்பாட்டையும் மார்க்ஸ ியத்தின் கோட்பாட்டையும் கைவிட்டார். வன்முறைக் கோட்பாட்டை நிராகரித்த அவர், மகாத்மா காந்தி விளக்கிய அகிம்சை தத்துவத்தை ஏற்றுக்கொண்டு அதனை தீவிரமாகப் பின்பற்றுபவராக மாறினார்.

சிறிலங்காவில் இனவாதம் தலைதூக்கி, சிங்கள அரசுகளால் வடகிழக்கில் தமிழர்கள் மீதான வன்முறைகள் வெடித்ததால் நாடு கொந்தளிப்பில் இருந்த 1986ஆம் ஆண்டு விக்டர் ஐவன் பத்திரிகைத் துறையில் நுழைந்தார்.

அவர் தொடங்கிய "ராவய" என்ற மாத இதழ் விரைவில் வாசகர்களிடையே பிரபலமடைந்து, அந்த நேரத்தில் அதிக தேவை கொண்ட பத்திரிகையாக மாறியது. இந்த பத்திரிகை ஊடாக அவர் பல்வேறு உண்மைகளை வெளிக்கொணர்ந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அச்சமற்ற செய்தி அறிக்கையிடல் மற்றும் கூர்மையான வர்ணனைக்கு பெயர் பெற்ற இவர், இலங்கை ஊடகங்களில் ஒரு முக்கிய நபராக தனது இடத்தை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

### புலிகளுடன் சமாதான பேச்சின் முன்னோடி:

மூத்த பத்திரிகையாளர் விக்டர் இவான் 1993 ஆம் ஆண்டு யாழ்குடா முழுமையாக புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயம் யாழ்ப்பாணத்திற்கு துணிந்து பலதடவைகள் விஜயம் செய்தவர்.

அத்துடன் 1994 - சந்திரிக்கா குமாரணதுங்க ஆட்சிபீடம் ஏறுவதற்கு மிகமுக்கியமான மூளையாக, சூத்திர தாரியாக செயற்பட்ட ஊடகவியலாளர் இவர் விளங்கினார்.

புலிகளுடன் சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்று சந்திரிக்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்தவர்களில் இவரும் முக்கியமான ஒருவர்.

ஆரம்பத்தில் சந்திரிக்கா அரசை அனுசரித்துப் போனாலும், பின்னர் அவர் கடுமையாக விமர்சித்தார்.

அக்காலத்தில் அவர் எழுதிய பிரபலமான புத்தகங்களில் ஒன்று "The Queen of Deceit" என்பதாகும். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கவினது ஆட்சிக் காலம் குறித்த சர்ச்சை தரும் புத்தகமாக வெளியாகியது.

சிங்கள ஊடகங்களில் இறுதிவரை மிகுந்த பரபரப்பான சர்ச்சைக்குரிய ஊடகவியலாளராகத் திகழ்ந்தவர். இலங்கைத் தீவில் நீண்ட காலமாக ஒடுக்கப்பட்டு வரும் தமிழ் பேசும் மக்களின் தேசிய சுய நிரணய உரிமைப் போராட்டத்தை அவர் அங்கீகாரம் செய்யவில்லை.

ஆயினும் ஆளும் அரசுகளுடன் சமரசமற்று முரண்பட்டு போராடினார். தனது இனத்தின் கொடுஞ் செயல்களை எதிர்த்து குரல் கொடுத்து வந்தார் என்பதும் வரலாற்று உண்மையாகும்.

சிங்கள பத்திரிகை உலகின் இன்னோர் ஜம்பவான் விடைபெற்று உள்ளார். சக மொழி பத்திரிகையாளர்களை நேசத்துடன் பழகிய, சமரசமற்ற பேனாப் போராளியான "ராவய" புகழ் விக்டர் ஐவனுக்கு எம் ஆத்மார்த்த அஞ்சலிகள் உரித்தாகட்டும்.

---

# ஈழமண்ணின் ஈசுவரங்கள் (இன்னிசை வெண்பா)

---

*கீரி மலையில் கிழக்குத் திசைபார்த்து*
*பாரியார் பார்வதி பக்கத் துணையுடன்*
*காரியம் ஆற்றும் கருணைக் கடவுளே*
*பாரினில் உள்ளோரைப் பார்.*

*திருக்கே சுவரத்தில் தேவியுடன் தங்கி*
*வருந்தும் அடியார்க்கு வாழ்வுதரும் ஈசுவரா*
*மூட்டு வலியாலே வாட்டும் உடலினை*
*மீட்டுத் தருவாயே மாற்று.*

*கோணேசர் குன்றில் குடியிருக்கும் கோமானே!*
*சாணேறி ஆழம் சறுக்கும் விதியகற்றி*
*கோலமான வாழ்வைக் குறையின்றித் தந்திட*
*சாலவே வேண்டுகிறேன் சாற்று.*

*சிலாபம் நகரிலே சீருடன் தோன்றி*
*கலாப மயில்போலக் காட்சியைத் தந்துமே!*
*காண வருவோர் கவலையைப் போக்கிடும்*
*காணம மேனியனைக் காண்.*

*காலிப் பதியின் கடற்கரைப் பக்கமாய்*
*மாலிகை தாங்கியே மன்மதனாய்க் காட்சிதரும்*
*தொண்டீ சுவரச் சுவாமியின் சன்னிதியில்*
*மண்டி மனதால் மயங்கு.*

*01. மாற்று – – –நீக்கு, மாற்றுமருந்து*
*02. சாலவே – – –மிகவும்*
*03. சாற்று – – –நிறையச்செய்*
*04. காணம் – – பொன்*
*05. மாலிகை – –பூமாலை*
*06. மயங்கு – – –வருந்து, கலந்திரு, நெருங்கியிரு.*

---

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
***(416) 844-7453***

கனடிய செய்திகள்
Canadian News

# 50 வருட கால வரலாற்றைக் கொண்ட கனடா ரிச்மண்ட் ஹில் விநாயகர் ஆலயத்திற்கு முதற்தடவையாக விஜயம் செய்த கனடியப் பிரதமர் என்ற பெயரைத் தட்டிக் கொண்ட ஜஸ்ரின் ட்ரூடோ




கனடா ஒன்றாரியோ மாகாணத்தில் முதன் முதலாக நிறுவப்பெற்றதும் 50 வருட கால வரலாற்றைக் கொண்டதுமான, கனடா ரிச்மண்ட் ஹில் விநாயகர் ஆலயத்திற்கு முதற்தடவையாக விஜயம் செய்த கனடியப் பிரதமர் என்ற பெயரைத் தட்டிக் கொண்ட ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் கடந்த 17-01-2025 வெள்ளிக்கிழமை அங்கு விஜயம் செய்து நூற்றுக்கணக்கான ஈழத்தமிழர்கள் மற்றும் தமிழ்நாட்டுத் தமிழர்கள் என அனைவரது வரவேற்பையும் அன்பையும் தனதாக்கிக் கொண்டார்.

ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும் கனடாவின் மத்திய அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் அழைப்பை ஏற்று அன்றைய தினம் மேற்படி ஆலயத்திற்கு வருகை தந்த கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் முதலின் ஆலயத்தின் அறங்காவல் சபைத் தலைவர் மற்றும் அங்கத்தவர்களால் வரவேற்கப்பெற்று ஆலய மண்டபத்திற்குள் அழைத்துச் செல்லப்பெற்றார்.

அங்கு சிவாச்சாரியப் பெருமக்களின் வரவேற்பைப் பெற்று அங்கு இடம்பெற்ற விசேட பூசைகளிலும் கலந்து கொண்டு கௌரவிக்கப்பெற்றார்.

அதன் பின்னர் அங்கு அமைக்கப்பெற்றிருந்த விசேட அலங்காரம் செய்யப்பெற்றிருந்த இடத்தில் பிரதமரையும் அமைச்சரையும் அறங்காவல் சபையின் தனாதிகாரி காந்தன் அவர்கள் வரவேற்று உரையாற்றி பின்னர் ஒலிவாங்கியை அமைச்சர் ஜஸ்ரின் ஹரி ஆனந்தசங்கரியிடம் ஒப்படைத்தார்.





தொடர்ந்து ஒன்றாரியோ வாழ் தமிழ் மக்கள் சார்பில் பிரதமர் அவர்களின் அர்ப்பணிப்பான சேவைகளுக்கும் குறிப்பாட ஈழத் தமிழர்கள் சார்ந்த பல முக்கியமாக விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து குரல் கொடுத்தும் அதேவேளை இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எதிராக 2009 வரைக்கும் மேற்கொண்ட அனைத்து தாக்குதல்களும் படுகொலைகளும் "இனப்படுகொலை" என்ற பகுதிக்குள் அடக்கப்பெற்று அதற்கான பொறுப்புக் கூறலை இலங்கை அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று தனது பதவிக்காலத்தில் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் குரல் கொடுத்த ஒரு நேர்மையான அரசியல் தலைவரே எமது பிரதமர் என்று குறிப்பிட்டு தொடர்ந்து உரையாற்றும் வண்ணம் பிரதமரிடம் வேண்டிக் கொண்டார்.

அங்கு உரையாற்றிய பிரதமர் அவர்கள் 50 வருடங்களுக்கு முன்னர் தொடங்கப்பெற்ற இந்த ஆலயத்திற்கு விஜயம் செய்யும் முதல் கனடியப் பிரதமர் என்ற பெயரை எனக்கு தந்துள்ளீர்கள். அதற்கு நன்றி. இந்த அழகிய ஆலயத்தில் தாங்கள் அனைவரும் சேர்ந்து எனக்களித்த வரவேற்பை நான் என்றும் மறந்து விடமாட்டேன். எங்கள் அனைவருக்கும் ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சிகரமாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க இயலாது. அதைப் போலவே ஒரு தேசத்திற்கும் காலங்கள் மாறும் போது போராட்டங்களை நடத்த வேண்டியிருக்கும். வீதிகளுக்கு இறங்கி போராடிய உங்களைப் போன்ற தமிழ் மக்களுக்கு இது நன்றாகப் புரியும் என்று நான் நம்புகின்றேன்.

எனவே நாம் வெற்றியடையும் வரை போராடுவோம் என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.








இலங்கையில் கண்டி கொழும்பு ஆகிய நகரங்களில் கனேடிய தரத்திற்கு நிகராக முதியோருக்கான நீண்ட கால பராமரிப்பு வசதி

Canadian Standard Long Term Care Facility in Kandy & Colombo - Sri Lanka

Are you living Abroad?
No one to take care of your aging parents / Family member in Sri Lanka? We are here for you...
With Canadian Senior Care Standards
Love for your loved ones....

1. Skilled Nursing care 24/7
2. Medical Services
3. Dementia/Alzheimer care
4. Luxury rooms
5. Nutritious meals
6. Physiotherapy
7. Social Activities
8. Religious Activities
9. Ayurveda Treatments

Our Newest Senior living Retreat in Sri Lanka offers quality long term care for your loved ones.
Our focus is providing exceptional services by Canadian trained and registered care professional, who truly care in an environment that promotes healing and wellness.

LET OUR FAMILY TAKE CARE OF YOURS
FACILITY STARTING MID 2025

CALL US FOR MORE INFORMATION
WHATS APP SRI LANKA: +94777872968
WHATS APP CANADA: +15875835686
EMAIL: mistymountaincare@gmail.com
Chamarimw@gmail.com

நீங்கள் வெளிநாட்டில் வசிக்கிறீர்களா?
இலங்கையில் உங்கள் வயதான பெற்றோர் / குடும்ப உறுப்பினரை கவனித்துக்கொள்ள யாரும் இல்லையா?
நாங்கள் உங்களுக்காக இலங்கையில் இருக்கிறோம் ...
கனடிய முதியோர் பராமரிப்பு தரத்திற்கு நிகராக அனைத்து வசதிகளுடன் நாம் சேவை செய்கின்றோம்
உங்கள் அன்புக்குரியவர்கள் நாமும் அன்பு காட்டுவோம்

1. அனுபவம் நிறைந்த மருத்துவ உதவியாளர்களின் 24/7
2. மருத்துவ சேவைகள்
3. மென்டியா/அல்சைமர் ஆகிய நோய்களுக்கான பராமரிப்பு
4. Luxury நிறைந்த வசதியான அறைகள்
5. ஊட்டச்சத்து உணவு
6. பிசியோதெரபி~ உடற் பயிற்சி வசதிகள்
7. சமூக மற்றும் பொழுதுபோக்கும் வசதிகள்
8. உங்கள் மதம் சார்ந்த வழிபாடுகள் மற்றும் பிரார்த்தனைகள் அனைத்தும் அடங்கும்
9. அத்துடன் Ayurveda சிகிச்சைகள்

இலங்கையில் எங்கள் புதிய மூத்தவர்களின் புதிய வாழ்க்கை பின்வாங்கல் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு தரமான நீண்ட கால பராமரிப்பை வழங்குகிறது.
எங்கள் கவனம் கனேடிய பயிற்சி பெற்ற மற்றும் பதிவுசெய்யப்பட்ட பராமரிப்பு நிபுணரின் விதிவிலக்கான சேவைகளை வழங்குவதாகும்,
அவர்கள் குணப்படுத்துதல் மற்றும் ஆரோக்கியத்தை ஊக்குவிக்கும் சூழலில் உண்மையிலேயே அக்கறை காட்டுகிறார்கள்.

எங்கள் குடும்பம் உங்கள் அன்புக்குரியவர்களை கவனித்துக் கொள்ளும் இந்த சேவை 2025 நடுப்பகுதியில் தொடங்குகிறது.

மேலும் தகவலுக்கு எங்களை அழைக்கவும்:
வாட்ஸ் ஆப் இலங்கை +94777872968
வாட்ஸ் ஆப் கனடா +15875835686
மின்னஞ்சல்: mistymountaincare@gmail.com
Chamarimw@gmail.com



# ‘வீட்டு’ச் சண்டை வீதிக்கு வந்தது

**“தமிழரசுக்கட்சிக்கோ தமிழ் தேசிய உணர்வுக்கோ, தமிழர் விடுதலைப்போராட்டத்துக்கோ தொடர்பற்ற, பொருத்தமற்ற ஒருவர் தலைமைப்பதவி ஆசையினால் செய்துவரும் சூழ்ச்சிகளினால் தமிழரசுக்கட்சி தனது தடத்தை, சுயத்தை, கொள்கை, கோட்பாட்டை தனது விசுவாசிகளை இழந்து இன்று பலரும் விமர்சிக்கும், எள்ளி நகையாடும் கட்சியாகிவிட்ட நிலையில், “நான் மேற்கொண்ட இந்திய பயணத்தை தடுக்க பெரும் சதி மேற்கொள்ளப்பட்டது. அது தொடர்பில் சுமந்திரனையும் விசாரிக்க வேண்டும்” என சிறீதரன் எம்.பி. பாராளுமன்றத்தில் கொண்டுவந்த சிறப்புரிமைப்பிரச்சினை உள் “வீட்டு” சண்டையை வீதிக்கு கொண்டுவந்துள்ளது.”**

**------------------------------------------------------------------- - கே. பாலா ----**

தமிழரசுக்கட்சியை தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் சூழ்ச்சியில் சுமந்திரன் அணி வெற்றிபெற்றுள்ளது. தமிழரசுக்கட்சியின் தலைமைத்துவம், விசேட குழுக்களை நியமிக்கும், தீர்மானங்களை எடுக்கும், அறிவிக்கும் அதிகாரங்கள் என அனைத்தும் திருகோணமலையில் கடந்த 18 ஆம் திகதி இடம் பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற் குழு கூட்டத்தின் பின்னர் சுமந்திரன் அணியின் கைகளுக்கு முழுமையாக சென்றுள்ளது. அதேவேளை இதுவரை “வீட்டுக்குள்” நடந்து வந்த சண்டைகளும் சதிகளும், குழி பறிப்புக்களும் தற்போது வீதிக்கு வந்துள்ளதால் சந்தி சிரிக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

தமிழரசுக்கட்சிக்கோ தமிழ் தேசிய உணர்வுக்கோ, தமிழர் விடுதலைப்போராட்டத்துக்கோ தொடர்பற்ற, பொருத்தமற்ற ஒருவர் தலைமைப்பதவி ஆசையினால் செய்த, செய்துவரும் சூழ்ச்சிகளினால் ஒரு வருட காலத்திற்குள் தமிழரசுக்கட்சி தனது தடத்தையும், சுயத்தையும் கொள்கை கோட்பாட்டையும் தனது விசுவாசிகளையும் இழந்து தமிழ்த்தேசிய விரோத சக்திகளின் கைகளில் சிக்குண்டு சிதறிப்போய் இன்று பலரும் விமர்சிக்கும், ஏளனம் செய்யும் எள்ளிநகையாடும் வகையில் நடு வீதியில் அம்மணமாக நிற்கின்றது.

தமிழரசுக்கட்சியின் தலைவர் பதவியிலிருந்து மாவைசேனாதிராஜா வலுக்கட்டாயமாக நீக்கப்பட்டு பதில் தலைவராக தனது விசிவாசியான சி.வி.கே. சிவஞானத்தையும் செயலாளராக தனது “கையாள்” சத்தியலிங்கத்தையும் கட்சியின் உத்தியோக பூர்வ பேச்சாளராக தன்னையும் நியமித்ததுடன் இந்தப் பதவிகளைப் பயன்படுத்தி கட்சி விசுவாசிகளும் மத்திய குழு உறுப்பினர்களும் தமிழ்தேசிய உணர்வாளர்களுமான அரியநேத்திரன், சிவமோகன் ஆகியோரை கட்சியிலிருந்து இடை நிறுத்தியும் தவராசா. சரவணபவன் ஆகியோரை கட்சியிலிருந்து வெளியேற்றியும் சிறீதரன், ஸ்ரீநேசன் ஆகியோரின் பதவிகளுக்கும் உறுப்புரிமைக்கும் ஆப்பை தயார் படுத்தியவாறு தனது ஆட்டத்தை தொடங்கிய சுமந்திரன் கடந்த 18 ஆம் திகதிய செயற் குழுக்கூட்டத்தின் மூலம் தனது ஆட்டத்தின் இறுதிக்கட்டத்துக்கு வந்துள்ளார்.

திருகோணமலையில் கடந்த 18 ஆம் திகதி நடந்த தமிழரசுக்கட்சியின் செயற்குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட தீர்மானங்கள் மூலம் சிறீதரன் தரப்பு தமிழ் தேசிய உணர்வாளர்கள், கட்சி விசுவாசிகள் முற்றாக புறக்கணிக்கப்பட்டு சுமந்திரன் அணி கையாட்கள், அடிவருடிகள், செம்புதூக்கிகள் பதவிகளுக்கும் விசேடகுழுக்களுக்கும் நியமிக்கப் பட்டுள்ளதுடன் சுமந்திரன் இல்லாமல் அரசுடனோ சர்வதேசத்துடனோ எந்த வித சந்திப்புக்கள் பேச்சுக்கள் இடம் பெறக்கூடாதென்பதற்கான “சதியோசனை”களும் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் கட்சியின் ஊடக பேச்சளரான சுமந்திரன் அறிவிக்கையில், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான வேட்புமனுக்களை 2023ஆம் ஆண்டு சமர்ப்பித்த தமிழரசுக்கட்சியின் வேட்பாளர்கள், கட்சிக்கு எதிராக செயற்பட்டிருப்பின், அவர்களின் பெயர்கள் நீக்கப்படும், இனப்பிரச்சினைக்கு முக்கியமான அரசியல் தீர்வாக இலங்கை தமிழ் அரசு கட்சி சமஷ்டி முறையிலான ஆட்சியையே வலியுறுத்துகின்றது, இனியும் வலியுறுத்தும், இதற்காக தற்போது 7 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழு இந்த விடயங்களுக்கு பொறுப்பாக இருந்து செயற்படும். தமிழ் பேசும் பரப்பில் உள்ள மற்ற கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக கட்சியின் வழக்குகளும் நிலுவையில் உள்ளன. அத்தனை வழக்குகளையும் முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாகவும் பேசப்பட்டது மேலும் கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்களிடம் விளக்கம் கோரப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

இந்த தீர்மானங்கள் மூலம் சுமந்திரன் தமிழரசுக்கட்சியில் தனது ஆதிக்கத்தை பலப்படுத்தியுள்ளார். ஏனெனில் உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பாளர்களில் சிறீதரன் தரப்பினருக்கு ஆப்பு வைக்கப்படும். அத்துடன் சமஷ்டியே தமிழரசுக்கட்சியின் இறுதி தீர்மானம் எனத்தெரிவித்துள்ளதன் மூலம் ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுடனான பேச்சுகளுக்கும் ஒன்றிணைவுகளுக்கும் முற்றுபுள்ளி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதற்காக நியமிக்கப்பட்டுள்ள 7 பேர் கொண்ட குழுவில் இருப்பவர்கள் தலைவர் சி.வி.கே சிவஞானம், சுமந்திரன், சத்தியலிங்கம் இரா.சாணக்கியன், துரைராஜசிங்கம். சயந்தன், ஸ்ரீதரன். இதில் சிறீதரனைத் தவிர ஏனையவர்கள் சுமந்திரன் அணியினர். ஆகவே சிறீதரனின் ஒன்றிணைவதற்கான ஏனைய தமிழ்த்தேசிய கட்சிகளுடனான பேச்சுக்கள் இனி இடம்பெற வாய்ப்பில்லை. கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்களிடம் விளக்கம் கோரப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதன் மூலம் சிறீதரன் அணியினரின் தலைகளுக்கு மேலே கத்தி தொங்கவிடப்பட்டுள்ளது.

திருகோணமலையில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் இந்த செயற்குழு கூட்டத்தின் போது சிறீதரனின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் இன்னும் பல நகர்வுகளை சுமந்திரன் அணி முன்னெடுத்தபோதும் அந்த முயற்சிகள் கைகூடவில்லை. அதாவது தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற குழு சர்வதேச தூதுவர்களுடன் சந்திப்புக்களை நடாத்தும் போது சுமந்திரனையும் அழைத்து செல்ல வேண்டும் என்று இரா.சாணக்கியன் ஒரு முன்மொழிவை கொண்டுவந்திருந்தார். ஆனால் அப்படி தேவையில்லை, பாராளுமன்ற குழுவை சர்வதேச நாடுகளின் தூதுவர்கள் அழைத்தால் பாராளுமன்ற குழு மட்டும் தான் சந்திக்க வேண்டும், அந்த குழுவிற்குள் சுமந்திரன் தேவையற்ற நபர் என கூட்டத்தில் இருந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் கடும் எதிர்ப்பு வெளியிட்டதால் இந்த விடயம் தீர்மானம் எடுக்கப்படாமல் கை விடப்பட்டது.

அதேபோன்று அரசியலமைப்பு உருவாக்க விவகாரங்கள், அரசியல் சார் உயர் கூட்டங்களில் கட்சியின் பதில் தலைவர் என்ற வகையில் சிவஞானமும், சுமந்திரனும் அழைத்து செல்லப்பட வேண்டும் என்று சுமந்திரன் அணியினால் இன்னொரு முன்மொழிவு முன்வைக்கப்பட்டது. சிவஞானம் கட்சித் தலைவர் என்ற ரீதியில் அழைத்து செல்லப்படலாம், சுமந்திரன் என்ன அடிப்படையில் அழைக்கப்பட வேண்டும் என உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் எதுவும் வழங்காமல் சுமந்திரன் அணி அந்த முன் மொழிவையும் கைவிட்டது.

பாராளுமன்றத்தின் அரசியலமைப்பு பேரவை வரலாற்றில் முதலாவது தமிழ் உறுப்பினராக சிறீதரன் இந்த முறை உள்ளக தேர்தலில் வென்று தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அந்த அரசியலமைப்பு பேரவை இதுவரை 6 தடவைக்கு மேல் கூடி பல முக்கிய நியமனங்களை வழங்கும் முடிவை இறுதி செய்திருக்கிறது. அந்த வரிசையில் அண் மையில் ஊழல் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் இயக்குநர் தெரிவின் போது இருவர் முன்னிலையில் இருந்தார்கள். அந்த இருவருக்கு இடையில் ஏற்பட்ட போட்டியில் சிறீதரனின் வாக்கு தீர்மானிக்கும் வாக்காக இருந்தது. அதில் தற்போது இயக்குநராக தெரிவு செய்யப் பட்டிருக்கும் நீதிபதிக்கு சிறீதரன் தனது வாக்கை செலுத்தியிருந்தார். இந்த நீதிபதி தான் இன, மத ரீதியாக செயற்பட்டு இன, மத விரோதங்களை ஏற்படுத்திய பொதுபலசேனவின் ஞானசார தேரருக்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்தவர்.

இந்த விடயம் இந்த செயற் மத்திய குழுவில் முன் எடுக்கப்பட்டு சஜித் பிரேமதாச ஆதரவளித்தவருக்கு சிறீதரன் ஆதரவளித்திருக்க வேண்டும் என சுமந்திரனும் சயந்தனும் வாதிட்டார்கள். இதன்போது கருத்து தெரிவித்த சிறீதரன் “அரசியலமைப்பு பேரவைக் கூட்டத்தில் என்ன முடிவு எடுக்க வேண்டும் என்று எனக்கு தெரியும். அதை நான் எடுப்பேன் நீங்கள் உங்கள் வேலைகளை மட்டும் செய்யுங்கள்” என்ற சாரப்பட்ட காட்டமான பதிலை வழங்கியதையடுத்து அந்த விடயமும் அத்தோடு கைவிடப்பட்டது.

இந்நிலையில் மட்டக்களப்பு துரைராஜசிங்கம் “அரசியலமைப்பு பேரவை விடயங்களில் சுமந்திரனின் ஆலோசனையை பெற வேண்டும்” என கூற முற்பட, அதற்கு சிறீதரன் “எனக்கு சொந்த சுயபுத்தி இருக்கிறது என்ன முடிவு எடுக்க வேண்டும் என எனக்கு தெரியும். நீங்கள் வேண்டுமானால் அவரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ளுங்கள்” என ஆவேசமடையவே துரைராஜசிங்கம் அமைதியாகியுள்ளார்.

இந்த செயற்குழுக்கூட்டத்தில் இப்படி பல முன்மொழிவுகள், விடயங்கள் மூலம் சிறீதரனை எப்படியாவது கட்டுப்படுத்த வேண்டும் என்ற நகர்வுகளை சுமந்திரன் அணி தீவிரமாக முன்னெடுத்த போதும். அவை தற்காலிகமாக தோற்கடிக்கப்பட்டுள்ளன. எனினும் தமிழரசுக்கட்சியில் சிறீதரனின் நிலைமை “நித்தம் கண்டம். பூரண ஆயுள்” என்றவகையிலேயே உள்ளது. அதேவேளை இந்த தீர்மானங்கள், நியமனங்கள், முன்மொழிவுகள் மூலம் சுமந்திரன் அணி வெற்றிகரமாக தமிழரசுக்கட்சிக்கு “பாடை” கட்டிவிட்டார்கள். இந்த “பாடை கட்டலுக்கு” ஆதரவாக மூத்த பத்திரிகையாளர்” என முன்னொரு காலத்தில் போற்றப்பட்டு பின்னர் “தோற்றுப்போன பத்திரிகையாளர்” என அழைக்கப்படும் ஒரு சில பணத்திற்கு “பத்தி” எழுதும் பத்திரிக்கையாளர்கள் “சங்கு” ஊதி பறை மேளம் அடிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் தான் மேற்கொண்ட இந்திய பயணத்தை தடுக்க பெரும் சதி மேற்கொள்ளப்பட்டதாகவும் அது தொடர்பில் சுமந்திரனையும் விசாரிக்க வேண்டுமென சிறீதரன் எம்.பி. பாராளுமன்றத்தில் கொண்டுவந்த சிறப்புரிமைப்பிரச்சினை உள் “வீட்டு” சண்டையை சந்திக்கு கொண்டுவந்துள்ளது.

இந்தியாவிற்கு நான் பயணம் மேற்கொண்டபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயணத்தடை உள்ளதாகத் தெரிவித்து விமானநிலைய அதிகாரிகளினால் தடுக்கப்பட்டமை தொடர்பில் எனக்கு நீதி வழங்கப்பட வேண்டும், அத்துடன் அவ்வாறு தடுக்கப்பட்டமைக்காண காரணமென சில விடயங்களைக் கூறியுள்ள முன்னாள் எம்.பி. சுமந்திரனிடமும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என பாராளுமன்றத்தில் வலியுறுத்திய சிறீதரன் இந்நடவடிக்கைகளின் பின்னணியில் பெரும் சதி இருப்பதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தனியார் ஊடகமொன்றுக்கு பேட்டியளித்த முன்னாள் எம்.பி. சுமந்திரன் “சிறீதரன் தடை செய்யப்பட்ட கனடாவிலிருந்து வருகின்ற அமைப்போடு பேச முனைந்தாகவும் அதற்காகத்தான் அவர் சென்னை செல்ல இருந்ததாகவும் அந்த காரணத்தின் அடிப்படையில்தான் அவரை தடுக்க விமான நிலையத்தில் முயற்சி செய்திருக்கலாம் என்ற ஊக்கத்தின் அடிப்படையில் சிறீதரனை அவர்கள் மறித்திருக்கலாம். ஊடகங்களில் வெளிவந்த செய்திகளை வைத்துதான் நான் இதனைக்கூறுகின்றேன்” என்று அதில் கூறியிருந்தார்.

எனவே இதுதொடர்பில் நீங்கள் சுமந்திரனிடம் விசாரித்தால் எந்த எந்த ஊடகங்களில் இந்த செய்தி வந்துள்ளது என்பதனை அறிந்து அந்த உ ஊடகங்களின் பிரதானிகளை விசாரிப்பதன் மூலம் உண்மையைக்கண்டறிய முடியும். இது எனக்கு எதிராக செய்யப்பட்ட மிகப்பெரும் சதியாகவே நான் கருதுகின்றேன். விமான நிலையத்தில் தடுக்கப்பட்டமை தொடர்பில் ஸ்ரீதரன் தனக்கு தெரிவிக்கவில்லை என்றும் சுமந்திரன் அதில் கூறியுள்ளார். நான் அவரை சென்னையில் சந்தித்தபோது சுமந்திரனும் இது தொடர்பில் என்னிடம் எதுவும் கேட்கவும் இல்லை.

இதனை விட வடக்கு மாகாண சபையில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் ஒரு உறுப்பினராக இருந்த அயூப் அஸ்மின் என்னை விமான நிலையத்தில் தடுத்த அன்றையய தினமான 10 ஆம் திகதி தன்னுடைய முக நூலில் “கடந்த நாட்களில் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் விமான நிலையத்தில் எவ்வித இடையூறுகளும் எவராலும் ஏற்படுத்தப்படவில்லை. அவ்வாறு பரப்பப்படுகின்ற செய்திகளில் உண்மைகள் எதுவும் இல்லை. விமான நிலைய உயரதிகாரி” என்ற செய்தியை வெளியிட்டுள்ளார்.

நான் இந்தியாவிலுள்ள பிரபல அரசியல் தலைவர் சீமானுடன் இருக்கும் படத்தையும் தன்னுடைய முக நூலில் போட்டு எனக்கு எதிராக இந்த செய்தியை அவர் பரப்பி உள்ளார். அஸ்மினும் சுமந்திரனும் நெருங்கிய நண்பர்கள். சுமந்திரன் சொன்ன செய்திக்கும் அஸ்மின் போட்டுள்ள பதிவுக்கும். ஏதோ ஒரு சங்கதி இருப்பதுபோல் எனக்குத்தெரிகின்றது. என்னை அந்த நிகழ்வுக்கு போக விடாது தடுப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே இதற்குப் பின்னால் சதி உள்ளது. எனவே இவ்விடயத்தில் மிகக்கூடிய கவனம் எடுத்து விசாரிக்கப்பட வேண்டும்.

நான் எந்தவொரு காலத்திலும் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள கனடாவிலுள்ள அமைப்புடன் பேசுவதற்கு தயாராகவில்லை. அப்படி யாரும் என்னைக் கேட்டதுமில்லை. அவ்வாறான முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவும் இல்லை. அரசின் பேச்சாளர் போல் அல்லது புலனாய்வுத்துறையின் பேச்சாளர் போல் ஊகத்தின் அடிப்படையில் ஊடகங்களில் வந்தது என சுமந்திரன் குறிப்பிட்டுள்ளது மிகப்பாரதூரமானது என பாராளுமன்றத்தில் பகிரங்கமாக சுமந்திரன் மீது சிறீதரன் சீறிப் பாய்ந்துள்ளார்.

சுமந்திரன் - சாணக்கியன் தரப்பின் சீண்டல்களையும் குழிபறிப்புக்களையும் புறக்கணிப் புக்களையும் நக்கல், நையாண்டிகளையும் கட்சிக்காக பொறுத்துவந்த சிறீதரன் பொறுமையிழந்ததன் வெளிப்பாடாகவே பாராளுமன்றத்தில் முன் வைத்த சுமந்திரன் மீதான குற்றச்சாட்டுக்களைப்பார்க்க வேண்டும். தமிழரசுக்கட்சிக்குள் நடக்கும் இந்த குத்துவெட்டுக்கள், காட்டிக்கொடுப்புக்கள், கழுத்தறுப்புக்கள் குழிபறிப்புக்கள் சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்துவிட்டது எனினும் தலைக்கனம் கொண்ட சுமந்திரன் இதற்கு பதிலடியாக சிறீதரனை ஏதோவொரு வலையில் பழி தீர்ப்பார். கட்சியிலிருந்து வெளியேற்றும் காய்களை இன்னும் வேகமாக நகர்த்துவார். அவரின் செம்புதூக்கிகள் சிறீதரனை இன்னும் மோசமாக எதிர்க்கத்தொடங்குவர். எனவே சிறீதரன் முன்னரைவிட இன்னும் கவனமாகவும் முன்னெச்சரிக்கையாகவும் பொறுமையாகவும் இருப்பதே நல்லது.

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவைத் தளமாகக் கொண்ட Behind Me International Media ஊடக நிறுவனம் அறிமுகம் செய்துள்ள 'Taste the Challenge' திறன் காண் போட்டி நிகழ்ச்சி



கனடாவைத் தளமாகக் கொண்ட Behind Me International Media ஊடக நிறுவனம் கடந்த சில வருடங்களாக கனடாவிலும் இந்தியாவிலும் கலையகங்களை அமைத்து அதன் மூலம் தமது ஊடகப் பணிகளை விஸ்த்தரித்து வருகின்றது. இந்த நிறுவனம் அண்மையில் அறிமுகம் செய்துள்ள 'Taste the Challenge' திறன் காண் போட்டியின் நிகழ்ச்சியின் ஆரம்ப நிகழ்வு மிசிசாகா நகரில் அமைந்துள்ள அவர்களது தலைமையகக் கலையகத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்டது.

இந்த அறிமுக நிகழ்விற்கு உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கனடா பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் சிரேஸ்ட உபு தலைவருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் அழைக்கப்பெற்றிருந்தார்.



அன்றைய போட்டி நிகழ்ச்சி முதலாவது நிகழ்ச்சியாக இருந்த காரணத்தால் ஆங்கிலத்தில் இடம் பெற்றது. எனினும் தொடர்ந்து தமிழ் மொழி ஊடாகவும் இந்த 'Taste the Challenge' திறன் காண் போட்டியின் நிகழ்ச்சி விரைவில் ஒளிப்பதிவு செய்யப்படும் என Behind Me International Media ஊடக நிறுவன நிர்வாக அறிவித்துள்ளது.












மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
**1130**

## வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையாஉ கோவில் தெல்லிப்பளை

*" பாலும் தெளிதேனும் பாகும் பருருப்புமிவை*
*நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலம் செய்*
*துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு*
*சங்கத் தமிழ் மூன்றும் தா "*

அற்புதங்களை அருளி அடியவர்களைத் தன்வசம் ஈர்க்கும் தெய்வீகசக்தி, பக்தர்களுக்குச் சோதனைகளைக் காட்டித் தன்வசப்படுத்திய பல சம்பவங்கள் அனைவரும் அறிந்ததே. இவ்வாறான நிலையிலே பல சோதனைகளின் பின்னர் வல்லிபுர ஆச்சாரியார், தந்தையின் வழிச்சென்று வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையாருக்கு மடாலயம் அமைத்து மகிழ்ந்தார். அவ்வூர் அன்பர்கள், விக்னங்கள் தீர்ப்பவனை அல்லும் பகலும் கைதொழுது போற்றிவரலாயினர். பரவும் அடியவர்கள் நெஞ்சிலே குடிகொள்ளும் கணபதி, இவ்வூர்மக்கள் பொருளாலும், அறிவாலும் ஏனைத் திறத்தினாலும் மகிழ்வெய்த, மருதடிப்பிள்ளையாராக வருத்தலைவிளானிலே எழுந்தருளியுள்ளார்.

பிள்ளையாரின் அருளால் சகல வளங்களையும் பெற்று வாழ்ந்தவரும், வியாபாரியுமான கந்தர் என அழைக்கப்பட்ட கணபதிப்பிள்ளை கந்தையா என்பவர், மருதடிப்பிள்ளையார்மீது அளவிலா அன்பும், பக்தியும் கொண்டவராக விளங்கினார். மடாலயத்துள் எழுந்தருளி ஊரார்க்கு நலன்விளைவிக்கும் மருதடிப்பிள்ளையார் சந்நிதி, பேராலயமாக உருவெடுக்கவேண்டும் என்ற ஆழ்ந்த எண்ணம், அடியவர் கந்தர் அவர்களுடைய எண்ணத்திலே ஆழமாக வேரூன்றியது. மருதடிப்பிள்ளையார் அருளால் பெருநிதிபெற்ற அவ்வள்ளல், மருதடிப் பிள்ளையாருக்கு அர்த்தமண்டபம் அமைக்க அவாவுற்றார். நினைவைச் செயலாற்ற முனைந்து, பணியாட்களைக் கொண்டு மண்டபம் அமைக்கும் வேலையையும் ஆரம்பித்தார். ஆனாலும் அவர் எண்ணம் நிறைவேறமுடியாமல் மண்டபம் அமைக்கும் இடத்தில் மருதமரக்கிளையொன்று பரந்து காணப்பட்டமையால், மண்டபம் அமைக்கும் பணி தாமதமடையநேரிட்டது. இறைகைங்கரியம் இவ்வாறு தடைப்படுகின்றதே என்று எண்ணும்பொழுது அவர் இதயம் கனத்தது.

மருதவேர்க்குமிழில் குடியிருக்கும் விநாயகப்பெருமானால் ஆட்கொள்ளப்பட்டதன் வெளிப்பாடாகக் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. மருதமரக்கிளையை உற்று நோக்கும்போது மருதடி விநாயகரின் கரம்போல விளங்கும் அக்கிளையை அழிக்க அவர் மனம் தயங்கியது. அடியவர் கந்தரின் துயரைக் கண்ணுற்ற பக்தர்கள், "மருதடி விநாயகனுக்கு அர்த்தமண்டபம் வேண்டும் என்ற திருவுளம் இல்லைப்போலும். இதற்காக மனம் சோர்வடையவேண்டாம்" என ஆறுதல் கூறினார்கள். மருதடியானுக்குத் தன்னால் அர்த்தமண்டபம் அமைக்கமுடியவில்லையே என்ற ஆறாமையுடன், மருதடியானை நோக்கி,

*" என் மனம் குளிர மண்டபம் அமைத்து*
*உன் கோவில் அழகு பார்க்க விரும்பிய*
*அடியேன் ஆசை நிராசை யாவதை*
*என்னால் தாங்க முடியாது "*

என முறையிட்டு, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கினார். தம்மையும் மறந்து துயரத்துள் அமிழ்ந்திச் செய்வதறியாது தவித்தார்.

இந்நிலையில் வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் விநாயகப்பெருமான், கந்தருக்கு அருள்பாலிக்கத் திருவுளங்கொண்டார். மருதமரத்தடியானே தஞ்சமென முறையிட்டு, கந்தரும் பக்தர்களும் சூழ்ந்திருந்தவேளையில், மருதமரக்கிளையிலிருந்து பேரொலி கேட்டது. கந்தரும், அன்பர்களும் அவ்வொலியைக்கேட்டு அதிர்ச்சியுற்றனர். மறுகணம் அர்த்தமண்டபம் கட்டத் தடையாகவிருந்த மருதின் கிளை முறிந்து, கோவிலுக்கு எச்சேதமுமின்றி அப்பால் விழுந்துகிடந்தது.

திகிலுற்ற அடியார் கூட்டம் மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து, கரங்களைத் தலைமேற் குவித்தவாறு, கண்ணீர்மல்கி, ஆனந்தக்கூத்தாடி மகிழ்ந்தனர். கணபதி தாசரான கந்தர், அழுது, தொழுது ஆனந்தக் கூத்தாடினார். தொப்பை அப்பனின் அற்புதத்தை எண்ணிப் பரவசமடைந்தார். மருதடிப்பிள்ளையார் தமக்கிரங்கிய திருவருளுக்கு அடிமையாகித்



தம்மையே அர்ப்பணித்தார். மருதடிப்பிள்ளையாரின் அற்புதங்களைக் கேள்வியுற்ற அயல்கிராமங்களிலுள்ள மக்களும், மருதடிப்பிள்ளையாரிடத்து அகலாப்பற்றும், பக்தியும் கொண்டனர். இவ்வாறாக ஆலயத்தின் அர்த்தமண்டபவேலைகள் சிறப்பாக நிறைவேறியது.


மருதடிப்பிள்ளையார்மீது ஆரா அன்பு கொண்ட பக்தர்கள், ஆலயத்தின் வளர்ச்சியிலே பலநிலைகளிலும் பங்குகொண்டு பணியாற்றியுள்ளனர். இவர்களுள் இளமை முதல் மருதடியானிடத்து அன்புகொண்ட அன்பர், முருகேசு பொன்னம்பலம் என்பவர் குறிப்பிடத்தக்கவர். வர்த்தலைவிளானில் வாழ்ந்த இவர் சிலகாலத்தின் பின்னர் மலாயா சென்று சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தார். சென்ற இடத்திலும் மருதடியானை மனதிருத்தி அல்லும் பகலும் எண்ணும் பக்தராகத் திகழ்ந்தார். எப்படியாவது மீண்டும் வர்தலைவிளான் சென்று, மருதடியானுக்கு அடியவனாகச் சேவை செய்து வாழவேண்டும் எனப் பெருவிரும்பம் கொண்டார். அவர் எண்ணம் நிறைவேற மலாயாவிலிருந்து வர்த்தலைவிளானை வந்தடைந்தார். "தன்கடன் பணிசெய்து கிடப்பதே" என வாழத் தலைப்பட்டார்.

*வளரும்...*

**அதிஷ்டம் காத்திருக்கிறது வெல்லுங்கள் 1,50,000 ரூபாய்கள்**

**எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும்**

**உலகளாவிய 3வது திறனாய்வுப் போட்டி - 2025**



தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

**15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்**



**முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் - 30,000.**
**இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 25,000.**
**மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 20,000.**
**நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 15,000.**
**ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 10,000.**
**10 பாராட்டுப்பரிசுகள் இலங்கை ரூபா தலா - 5000.**

**குரு அரவிந்தனின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி.** குறைந்தது **2 புதினங்கள்** அல்லது **4 சிறுகதைகள்** பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1600 சொற்களுக்கு மேற்படாமல் யூனிகோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவர்களாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாகவெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது.

மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும். உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய **கடைசி நாள்: 31. 03. 2025**

போட்டி முடிவுகள் 30 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2025 இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல்: : kurufanclub@gmail.com

இணையம்: : https://kurunovelstory.blogspot.com/, http://tamilaram.blogspot.com/
https://canadiantamilsliterature.blogspot.com/

இந்த அறிவிப்பினை நண்பர்களுடன் பகிர்ந்து உதவுங்கள். நன்றி!

**செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம். kurufanclub@gmail.com**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

# இவ்வார ராசிபலன்

## 24-01-2025 வெள்ளி தொடக்கம் 30-01-2025 வியாழன் வரையும்




**மேஷம்:** பொறுப்போடும் சிறப்போடும் செயல்படும் வாரம். சோதனைகள் நீங்கும். பதவி உயர்வு தாமதமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். வயிற்று உபாதைகளும் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி கூடும். தனவரவுகள் பெருகும். முயற்சிகள் பலிதமாகும். செயல்களில் துணிவு கூடும். தடைகள் அகலும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். நல்லச் செய்திகள் நாடி வரும். வினைகள் அகலும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். விவசாயம் லாபம் தரும். வியாபாரம் மந்தமாக இருக்கும். எதிர்ப்புக்கள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். பெற்றோர்கள் பாராட்டுக் கிட்டும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குடும்ப குழப்பம் அகலும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். ஆடம்பரப் பொருள் சேரும். மங்களகரமான செய்தி வரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். புகழ் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். கடன் சுமைகள் குறையும். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். வாகன மாற்றம் ஏற்படும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல் அதிகரிக்கும். திருப்திகள் அதிகரிக்கும். சுபச்செய்தி வரும். அனுகூலச் செய்தி வந்து சேரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். எண்ணங்கள் பூர்த்தியாகும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொழில் லாபம் உண்டு. ஆண்களின் அதிகாரம் உண்டு. சாதகமான வாய்ப்பு அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,P





**ரிஷபம்:** உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும் வாரம். சாதனையான எண்ணம் உதயமாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பொருள் வரவு ஏற்படும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். மனைவியால் நன்மை உண்டு. மற்றவர்களால் தொல்லை உண்டு. பதவி உயர்வு தாமதமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். வாகன மாற்றம் உண்டு. கொடுக்கல் வாங்கலால் திருப்தி தரும். சகோதர ஒற்றுமை பலப்படும். ஆரோக்கியம் அதிகரிக்கும். புத்துணர்வோடு செயல்படுவது நல்லது. தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். சாதனை படைக்கும் காலம். சுப விரயம் கூடும். உடல்பொலிவு கூடும். தான தர்மங்கள் பலன் தரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வந்து சேரும். உண்மைகள் வெளிப்படும். உயர்வுகள் தாமதமாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தன சேர்க்கையுண்டு. மனநிம்மதி குறையும். பணியில் பாராட்டு கிடைக்கும். குடும்ப மேன்மை உண்டு. சேமிப்பு அதிகரிக்கும். புதிய சிந்தனை மேலோங்கும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். நலமும் வகையான நன்மையும் பெருகும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடம் மாற்றம் ஏற்படும். பெருமைகள் கூடும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை. முயற்சிகள் வளர்ச்சி அடையும். யோக பலம் கூடும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். பொருளாதார நிலை உயரும். தொட்டக் காரியம் ஜெயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 5,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**மிதுனம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு உயரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். வறுமைகள் விலகும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். உற்சாகம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. விரக்திகள் மறையும். உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். புத்தி சாதுர்யம் பெருகும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். உடல்பொலிவு கூடும். கல்வியில் கவனம் தேவை. திட்டமிட்ட செயல் வெற்றிமுகமாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். பயண முயற்சி பலன் தரும். நினைத்த காரியம் நிறைவேறும். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் திருப்தி தரும். அன்னிய தேசப்பயணம் உண்டு. திருப்புமுனை ஏற்படும். பொருளாதாரம் மேம்படும். குடும்ப வளர்ச்சி கூடும். அணிமணிகள் சேரும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு லாபம் தரும். சகோதரியினால் நன்மை உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. விரும்பிய பொருள் கிடைக்கும். ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். பொதுவிஷயங்களில் நாட்டம் ஏற்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். மங்களச்செய்தியால் மனம் மகிழும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,S




**கடகம்:** வருமானம் திருப்தி தரும் வாரம். பொறுப்புகள் கூடும். வாகன மாற்றம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சி பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி பெருகும். மருத்துவச் செலவுகள் குறையும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். இல்லத்தில் மகிழ்ச்சி துள்ளி விளையாடும். புதிய நட்பில் கவனம் தேவை. இடமாற்றத்தால் நன்மை உண்டாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைத்தூரப் பயணம் ஏற்படும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். மனோ பயம் அகலும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். முத்தான வாய்ப்புக்கள் வரும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உண்மைகள் வெளிப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். பிள்ளைகளின் கல்விச்செலவுகள் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லைகள் ஒழியும். பிள்ளைகளின் கல்விச் சலுகைகள் அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. சுபவிரயம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது.

வழிபட வேண்டிய தெய்வம்: லஷ்மி குபேரர், அதிர்ஷ்ட எண்: 3,9,1,2
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,A





**சிம்மம்:** திருப்பங்கள் நிறைந்த வாரம். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். பணியில் பாராட்டு கிட்டும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். எதிர்கால எண்ணம் ஏற்றம் தரும். கணவன், மனைவி இடையே நல்லதொரு புரிந்துணர்வு ஏற்படும். வீடு வாங்கும் வாய்ப்பு உள்ளது. வாழ்வில் முன்னேற்ற நிலையை அடைவீர். சுபிட்ஷங்கள் பெருகும். சமுதாய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனஅமைதி உண்டாகும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி கிட்டும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். புகழும், பொருளும் பெருகும். கனவுத்தொல்லை உண்டு. கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். பூவீகச்சொத்து சேரும். செயல் திறமை வெளிப்படும். விவசாயம் லாபம் தரும். விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். புண்ணிய ஸ்தலப் பயணம் ஏற்படும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழித் தொல்லை குறையும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். வீண் வம்பு விலகும். குடும்ப சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும். உணவுப்பிரியம் அதிகரிக்கும். பாராட்டுக்கள் பெருகும். பணவரவு தாமதமாகும். புதிய தொழில் வாய்ப்பு அமையும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். தன்னம்பிக்கை கூடும். இன்னல்கள் அகலும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 8,9,4,6
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,T




**கன்னி:** எண்ணிய காரியம் கைகூடும் வாரம். சிறிய இடையூறு ஏற்படும். பெரிய மனிதர்களின் சந்திப்புக் கிட்டும். பகைவர் பணிந்து நிற்பர். மனைவி உடல்நலம் பாதிக்கும். புதிய நட்பு உருவாகும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் ஏற்படும். பிணிகள் அகலும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். ஆபரணச் சேர்க்கையுண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மையுண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்யம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். உறவுகளால் நன்மை உண்டு. கால்நடைகளால் லாபம் உண்டு. காதலில் மோதல் உண்டு. எள் தானம் செய்வதால் ஏற்றங்கள் அதிகரிக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். வாகனச் செலவு ஏற்படும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. தொழிலில் நிம்மதி பெருகும். வழக்கு வெற்றி தரும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். தந்தையின் நலம் பெருகும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பொருள் வரவு திருப்தி தரும். பித்தளைத் தொழில் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். நல்லோர்கள் நட்பு கிட்டும். மன உற்சாகம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அங்காரகன், அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,H




**துலாம்:** சாதனைகள் நிகழ்த்தும் வாரம். புகழ்ச்சி அதிகரிக்கும். நோய், நொடிகள் அகலும். தங்க நகைகள் சேரும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். பணப்பற்றாக்குறை நீங்கும். உடன்பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தொல்லைகள் ஒழியும். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு கூடும். வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். போட்டி, பொறாமைகள் விலகும். தொழில் விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். வேலைப்பளு கூடும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கடன் சுமை குறையும். வழிபாடு மாற்றம் தரும். கல்வியில் ஈடுபாடு கூடும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். குதூகலமான காலம். அற்புத வாய்ப்புக்கள் கிட்டும். பெண்களின் ஆலோசனை மாபெரும் வெற்றியை தரும். ஆடை, அணிகலன் சேரும். சுபகாரியம் கைகூடும். பங்குச்சந்தை லாபம் தரும். காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். பாதிப்புக்கள் அகலும். ஆடம்பர அகங்கள் கூடும். முயற்சிகள் பலன் தரும். மங்களச்செய்தி வரும். மருத்துவச் செலவு உண்டு. மாற்று யோசனை பயன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். திருத்தமான முடிவு ஏற்படும். வியாபாரத்தில் தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். நண்பர்களால் நன்மையுண்டு. புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். பெண்களால் ஆதாயம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,J

*(தொடர்ச்சி 22 பக்கம்)*



Sunday
26th
January
2025
5PM
செந்தில் குமரனின் நிவாரணம் அமைப்பு பெருமையுடன் வழங்கும்
பொன்மனச் செம்மல், ஏழைகளின் இதய தெய்வம் எம்.ஜி.ராமச்சந்திரன்
அவர்களின் வாழ்வை கொண்டாடும் முகமாக
MGR 108
மாபெரும் இன்னிசை விருந்து
Metropolitan Centre
3840 Finch Ave East
Scarborough
SCAN ME
அவர்களின் அட்டகாசமான பாடல்களுடன், அவரின் சில அபிமான நடிகர்களின் முத்தான பாடல்களையும்
பாடி உங்களை மகிழ்விக்க ஆவலோடு உள்ளோம். வருகை தந்து உயிர்கள் காத்திடுவீர்
Life-Saving Surgeries | Hospital Equipments | Livelihood Assistance | Mobile Medical Clinic
416-200-7652, 647-526-7652
www.Nivaranam.com
$30, $60, $100
திரட்டப்படும் நிதி முழுவதும் தாயகத்தில் நலிந்த நோயாளிகளின் இருதய – சிறுநீரக் சத்திரசிகிச்சைகளுக்காகவும், மருத்துவ கட்டுமானங்களுக்காகவும்,
கிளிநொச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கான நடமாடும் மருத்துவ சேவைக்காகவும், வாழ்வாதார உதவிகளுக்கும், இதர தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்.
100% of proceeds will be used for projects without any expenses deducted
முழு நிதி விபரங்களும் சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் | Thanks to all our Media Partners
செந்தில் குமரனின் நிவாரணம் (கனடா)
FREE PARKING




Senthil Kumaran's Relief Agency (Canada)
www.Nivaranam.com
OUR PROJECTS
Life-Saving Surgeries
Livelihood Assistance
Mobile Medical Clinic
உயிர் காக்க உதவுங்கள்
HELP SAVE A LIFE
WE SAVED OVER 125 LIVES THROUGH OUR HEART SURGERY PROJECT
$139,768.75 (Rs. 31,609,806.03) donated to 3 hospitals in Northern Sri Lanka, with Hon. Eric Walsh, the Canadian High Commissioner as our Chief Guest
Two Dialysis Machines donated to Chavakachcheri Hospital
One Dialysis Machine donated to Mallavi Hospital
Echo Machine with TOE probes donated to the Jaffna Hospital - $94,599.20 (Rs. 21,688,956.03)
100 LIFE-SAVING HEART SURGERIES
The crossing of 100 life-saving Heart surgeries was celebrated @ the Lanka Hospital on the 4th of March 2023, with Mr. Daniel Bood, from the Canadian High Commission, as the Chief Guest
We are glad to announce that the "Canada—Mallavi Dialysis Unit" at the Mallavi Base Hospital has been funded at $47,407 (Rs 12,800,000)
The dialysis machines funded in Mallavi, Mancholai, and Chavakachcheri have been operating effectively and benefiting patients
"Toronto - Mullai" dialysis clinic at the Mancholai has been funded at $14,236.53 (Rs 3,582,080)
416 200 7652
DONATIONS CAN BE SENT TO - INFO@NIVARANAM.COM

# இவ்வார ராசிபலன்

(20_ பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். ஆதாயம் பெருகும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். புதிய எண்ணங்கள் நிறைவேறும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பழைய கடன் பாக்கிகளும் வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பெண்கள் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. மனதில் நினைத்த காரியம் நிறைவேறும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். நீண்ட நாள் பிரச்சனை நிறைவேறும். உறவினர் வகையில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். ஆண்களின் கோரிக்கை நிறைவேறும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. வாழ்வில் வளம் கூடும். தொழில் வாய்ப்புக்கள் வந்து சேரும். தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் உண்டு. உலோகத் தொழில் உயர்வு பெறும். குடும்ப லஷ்மி கடாட்ஷம் பெருகும். இன்னல்கள் அகலும். தொல்லைகள் குறையும். கால்நடைகளால் பலன் உண்டு. பழிச்சொல் தேடி வரும். கையிருப்புகள் கரையும். அந்தஸ்து உயரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். தேவைகள் அதிகரிக்கும். புத்திரர் வகையில் சந்தோஷம் ஏற்படும். நினைத்தபடி திருமணம் நடக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,F




**தனுசு:** எதிரிகளால் ஏற்றம் அதிகரிக்கும் வாரம். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். காதல் எண்ணம் உருவாகும். புதிய பொருள் சேரும். பழைய நட்பினால் பலன் உண்டு. உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். வாய்ப்புக்கள் பெருகும். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் மிகுதியாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. பழையக்கடன் வசூலாகும். கல்வியில் மேன்மையுண்டு. சிக்கனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல்ஆரோக்கியம் சீராகும். மாணவர்கள் உற்சாகம் அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்களச் செய்திகள் வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். தந்தையின் உடல்நலம் சீராகும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். பெண்களால் மதிப்பும், மரியாதையும் உயரும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். தொட்ட காரியம் ஜெயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,U




**மகரம்:** சாமர்த்தியமாக செயல்படும் வாரம். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. வார்த்தைகளில் நிதானம் நல்லது. மங்களச் செய்தி வரும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் கிடைக்கும். தர்ம சிந்தனை மேலோங்கும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். பெண்களின் ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பருப்பு தானம் பாவம் போக்கும். ஊக்கம் அதிகரிக்கும். வருமான வாய்ப்பு கூடி வரும். குதூகலம் சேரும். பழையக்கடன் தீரும். பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணங்கள் மேலோங்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். மகிழ்ச்சியான செய்திகள் வரும். வளமான வாழ்வு அமையும். உலோகத்தொழில் லாபம் தரும். தாய் உடல்நலனில் அக்கறை தேவை. நிதிப்பற்றாக்குறை நீங்கும். வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். குடும்ப மேன்மை உண்டாகும். கர்ம வினைகள் அகலும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத்தொழிலில் லாபம் அதிகரிக்கும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும் வருமானம் கைகூடி வரும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். புதிய வாய்ப்பு வரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவனமுடன் செயல்பட வேண்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அக்னி லிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,P




**கும்பம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். பொன், பொருள் சேர்க்கையுண்டு. குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும். மறைமுகமாக தொல்லை தருகிறவர்கள் விலகி செல்வர். வயிற்றுப்போக்கு வரும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பணவரவு உண்டு. கௌரவம் அதிகரிக்கும். அன்றாட நாட்கள் மனமகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோ'ம் உண்டாகும். மனஅமைதி கிடைக்கும். பங்குச்சந்தைத் தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உற்சாகம் களை கட்டும். மனோ தைரியம் அதிகரிக்கும். சுப விரயம் கூடும். நன்மைகள் நாடி வரும். அற்புதமான நாளாக அமையும். குடும்ப கௌரவம் உயரும். பயணத்தால் பலன் உண்டு. சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். சீரான வாழ்வு அமையும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். ஆலய தரிசனம் அமைதியைத் தரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். பெண்களால் மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். நட்புவட்டம் பெருகும். வராத கடன் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வாழ்வுநிலை உயரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர்.

வழிபட வேண்டிய தெய்வம்: கொண்டத்து காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,X




**மீனம்:** திறமைகள் அதிகரிக்கும் வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். மேலதிகாரியின் பாராட்டுக் கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். கோரிக்கைகள் நிறைவேறும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய் வழி உறவில் நன்மை உண்டாகும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். மாற்று யோசனை பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் உண்டு. உறவினரால் நன்மையுண்டு. எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலம் கூடும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். கடன் பாக்கிகள் வசூலாகும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். பயணம் வெற்றி தரும். விரயங்கள் அதிகரிக்கும். சொத்துக்களால் லாபம் உண்டு. தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். திடீர் மாற்றம் நன்மை தரும். மங்கள நிகழ்ச்சிகளிலிருந்து பங்குப் பெறுவீர்கள். புதிய தொழில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். விரோதங்கள் விலகும். ஆரோக்கியம் சீராகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திரபகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,I





TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி aches | Stress, Migraine & All Types of Head- |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

☑ COMMERCIAL ☑ RESIDENTIAL ☑ VACANT LAND
☑ INDUSTRIAL ☑ CONSTRUCTION



## OUR SERVICE

CONTACT US

**RESIDENTIAL, COMMERCIAL**

- Purchase (Builder Purchase, MLS Purchase, Private Purchase)
- Equity line of Credit
- Refinance
- Renewal



# NESAN Subramaniam

# 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8








26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொட்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1503 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 24, 2025




# யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பொறியியல் பீட குடிசார் மற்றும் சுற்றாடல் சங்கத்தின் "த நெயில்" (The Nail) சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் குடிசார் மற்றும் சுற்றாடல் சங்கத்தின் முயற்சியில் உருவான "த நெயில்" (**The Nail**) சஞ்சிகை வெளியீடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 23ம் திகதி வியாழக்கிழமையன்று காலை (23.01.2025) இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா சிறப்பு விருந்தினராகவும், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

# சமரசமற்ற பேனாப் போராளி "ராவய" விக்டர் ஐவன் !



*விடுதலைப் புலிகளுடன் சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்க 1994 ல் சந்திரிக்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்தவர்களில் முக்கியமான ஒருவர்.*

*- ஐங்கரன் விக்கினேஸ்வரா -* ***Australia***

(இறுதிவரை மிகுந்த பரபரப்பான சர்ச்சைக்குரிய ஊடகவியலாளராகத் திகழ்ந்த விக்டர் ஐவன், தமிழ் பேசும் மக்களின் தேசிய சுய நிரணய உரிமைப் போராட்டத்தை அங்கீகாரம் செய்யாவிடினும், தனது இனத்தின், ஆளும் அரசுகளின் கொடுஞ் செயல்களை எதிர்த்து குரல் கொடுத்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது)

தற்போது ஆளும் தேசிய மக்கள் சக்தியின் முன்னைய ஜேவிபியின் ஆரம்பகால மிக முக்கியஸ்தரான விக்டர் ஐவன் (பொடி அத்துல - **Victor Ivan**) கண்டுகொள்ளப்படாத பேனாப் போராளியாக மரணித்துள்ளார்.



# "வீட்டு"ச் சண்டை வீதிக்கு வந்தது

-கே.பாலா்-

தமிழரசுக்கட்சியை தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் சூழ்ச்சியில் சுமந்திரன் அணி வெற்றிபெற்றுள்ளது.தமிழரசுக்கட்சியின் தலைமைத்துவம்,விசேட குழுக்களை நியமிக்கும் ,தீர்மானங்களை எடுக்கும்,அறிவிக்கும் அதிகாரங்கள் என அனைத்தும் திருகோணமலையில் கடந்த 18 ஆம் திகதி இடம் பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற் குழு கூட்டத்தின் பின்னர் சுமந்திரன் அணியின் கைகளுக்கு முழுமையாக சென்றுள்ளது.அதேவேளை இதுவரை ""வீட்டுக்குள்"" நடந்து வந்த சண்டைகளும் சதிகளும் ,குழி பறிப்புக்களும் தற்போது வீதிக்கு வந்துள்ளதால் சந்தி சிரிக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 17ம் பக்கம்)



# தமிழர்களே! தமிழர்களே!

-யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்-

நாடாளுமன்றத்தில் சிறீதரன் சுமந்திரனுக்கு எதிராக உரையாற்றியிருக்கிறார். கட்சியின் உள் முரண்பாடு நாடாளுமன்றத்திலும் பிரதிபலித்திருக்கின்றது. ஒரு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் வைத்து முறைப்பாடு செய்வது அநேகமாக இதுதான் முதல் தடவையோ தெரியவில்லை.

விமான நிலையத்தில் சிறீதரன் சிறிது நேரம் மறித்து வைக்கப்பட்டமை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பதில் சொல்ல வேண்டும். அதேசமயம் அது தொடர்பாக சுமந்திரன் தெரிவித்த கருத்துக்களுக்கு சுமந்திரன் பதில் சொல்ல வேண்டும்.அந்தக் கருத்துக்கள் சரியா பிழையா என்பதனை விமான நிலைய நிர்வாகம் வெளிப்படுத்த வேண்டும்.இது தொடர்பான விசாரணைகளை நடத்தி உண்மையை வெளியே கொண்டு வர வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. அதேசமயம் இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சிக்குள் நிலவும் தலைமைத்துவ முரண்பாடும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதுதான் இங்கே இக்கட்டுரையின் குவிமையம்.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

# கனடாவைத் Behind Me International Media ஊடக நிறுவனம் அறிமுகம் செய்துள்ள 'Taste the Challenge' திறன் காண் போட்டி நிகழ்ச்சி



கனடாவைத் தளமாகக் கொண்ட **Behind Me International Media** ஊடக நிறுவனம் கடந்த சில வருடங்களாக கனடாவிலும் இந்தியாவிலும் கலையகங்களை அமைத்து அதன் மூலம் தமது ஊடகப் பணிகளை விஸ்த்தரித்து வருகின்றது .இந்த நிறுவனம் அண்மையில் அறிமுகம் செய்துள்ள **'Taste the Challenge'** திறன் காண் போட்டி நிகழ்ச்சியின் ஆரம்ப நிகழ்வு மிசிசாகா நகரில் அமைந்துள்ள அவர்களது தலைமையகக் கலையகத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்டது.

தொடர்ச்சி 18ம் பக்கம்)

